தீபம் : 02

# ஆத்மஜோதி

ஒளி : 13

ஆத்மீக மாத சஞ்சிகை

வைகாசி- 2006



பொது நூலகம்

ஆத்மஜோதி

நா.முத்தையா

அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உ

சிவமயம்

ஆத்மஜோதி

தாபிதம் : 1948

**ARTHMA JOTHY**

Est. 1948

ISSN 17039185


தீபம் : ஒளி

பார்திப வருடம்

**சித்திரை**

**2006**

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | எங்குமுள்ள பிள்ளையார் | 02 |
| 2. | எல்லாம் ஈசன் செயல் | 03 |
| 3. | பைரவரை வணங்கினால் பயம் போகும் | 05 |
| 4. | தியானம் | 08 |
| 5. | சித்தானைக்குட்டி தரிசனம் | 14 |
| 6. | திருப்பணியும் கருப்பணியும் | 19 |
| 7. | மகாகவி பாரதி போற்றிப் பாடிய யாழ்ப்பாணத்துச் சுவாமி இவரே... | 23 |
| 8. | பணிவிடை புரியும் பாக்கியம் | 30 |
| 9. | ஆத்திசூடி - விளக்கத்துடன் (1-7) | 35 |



**பதிப்பாசிரியர்**

**நா. முருகையா**
**தியான**
**மணிமண்டபம்**

**எழுத்தமைப்பும்**
**அச்சுப் பதிப்பும்**
ஜய்ராம் பிறின்ரேஸ்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான
மணிமண்டபம்
ஏழாலை.



**தொடர்பு முகவரி**

நா.முருகையா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.


| | | |
|---|---|---|
| பிரதி | :- | 30/= |
| வருட சந்தா | :- | 400/= |
| ஆயுள் சந்தா | :- | 3000/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குமுள்ள பிள்ளையார்

## ஏழாலை அத்தியடி விநாயகர்

ஊழாதி வினை தீர்க்கும் ஓம்மு கத்தார்
உள்ளியுணர்ந் தோம்புவார் தம்ம கத்தார்
வாழாரை வாழ்விக்கும் வார்க ரத்தார்
வானோரின் துயர்போக்கி வாழ்வ ளித்தார்
ஆழாழக் கிணறதுபோல் அறிவில் ஊறும்
ஆன்றோரின் நீதியால் அமைதி காணும்
ஏழாலை அத்தியடி இலங்கு கின்றார்
ஏத்தியிவர் இணையடிகள் இறைஞ்சு வாமே.

## சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார்

சந்திரனைத் தாதைதலை அணிய வைத்தார்
தந்திரத்தில் மிகவல்லார் மந்தி ரத்தார்
விந்தைமிகு கயமுகனின் வீரம் வென்றார்
வேகமுடன் வந்தபெரு நெருப்பை யுண்டார்
அந்தமிலாத் தமிழ்க்கல்வி வளர்த்த ஆசான்
அறிஞர்புகழ் குமாரசாமிப் புலவர் ஆக்கச்
சந்தைவளச் சுன்னாகஞ் சார்ந்து காக்குஞ்
சந்திரசே கரப்பிள்ளை தாள்வீழ் வாமே

## இணுவில் பரராசசேகரப் பிள்ளையார்

எரிகாற்று நிலநீரும் வானு மானார்
எங்குஞ்செங் கோலோச்சும் கோனு மானார்
பரிசாகப் போட்டியிலே பழத்தை வென்றார்
படுபாவக் கயமுகனின் பரிசு கொன்றார்
திருவாய திருயாவும் இணுவை யூரிற்
சேரவருள் பாலித்துத் திகழு கின்றார்
பரராச சேகரனார் பரவி முன்னாள்
பணிந்தபெரு வரலாற்றுப் பிள்ளை யாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் ஈசன் செயல்

மனித வாழ்க்கையை உருவாக்கி, நடத்திச் செல்பவன் இறைவன்தான். நமக்கு எத்தனையோ ஆசைகளும், பேராசைகளும் இருக்கலாம். அவை அனைத்தும் நிறைவேற இயலாது. அவரவர் கர்மவினைப்படிதான் வாழ்க்கை அமைகின்றது. நம் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களும், இறைவனுடைய சங்கல்பத்தால், முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டவை. அவற்றை மாற்றவோ, திசை திருப்பவோ நமக்கு அதிகாரம் இல்லை. அதனால் தான் 'எல்லாம் ஈசன் செயல்' என்று பெரியோர்கள் கூறியுள்ளனர். இதனை எளிமையாக விளக்க ஓர் உதாரணக் கதையைப் பார்ப்போம்.

ஒரு மன்னனுடைய நாட்டில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தனர். ஒருவன் நாஸ்திகன். (கடவுளை நம்பாதவன்). மற்றவன் ஆஸ்திகன். எல்லாவற்றுக்கும் கடவுளையே நம்பியிருந்தவன். அந்த நாட்டு அரசனுக்கும் இறைவனிடம் முழு நம்பிக்கை கிடையாது. தானே எல்லாம் என்று எண்ணியிருந்தான்.

ஒருமுறை இரண்டு பிச்சைக்காரர்களுக்கும் ஒரு வாக்குவாதம் நடந்தது. 'கடவுள் விரும்பினால், அல்லது அருள்புரிந்தால், பரம ஏழைகூட பணக்காரனாகி விட முடியும்' என்று ஆஸ்திகன் வாதிட்டான். அதை மறுத்த நாஸ்திகன், 'ஏழையைப் பணக் காரனாக்க கடவுள் தேவையில்லை. இது ஒரு மஹாராஜாவாலேயே முடியும்' என்று கூறினான். இந்தச் செய்தியை அறிந்த அரசன், தன்னைக் கடவுளுக்கு ஒப்பாகக் கருதிய பிச்சைக்காரனைப் பாராட்டினான்.

அவனை எப்படியாவது பணக்காரனாக்கி விட வேண்டும் என்று விரும்பினான். ஆனால், அதை ஒரு வித்தியாசமான முறையில் செய்து, பிச்சைக்காரனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்க வேண்டும் என்று அரசன் நினைத்தான். அரண்மனை வேலைக்காரனை அழைத்தான். ஒரு பெரிய பலாப்பழத்தை வாங்கி வரச் சொன்னான். மேல் பகுதியான அதன் தோலைக் கீறி, உள்ளே இருந்த பலாச்சுளைகளையும், நாரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துவிட்டு, அதன் உள்ளே சில பொற்காசுகளையும், விலையுயர்ந்த மணிகளையும் நிரப்பி, மீண்டும் அதனைப் பலாப்பழம் போல மூடிவிட்டான். நாஸ்திகனான பிச்சைக்காரனை அழைத்து, 'இது அரசன் தரும் பரிசு பெற்றுக்கொள்' என்று கொடுத்தான்.

அந்தப் பிச்சைக்காரனுக்குப் பலாப்பழம் பிடிக்காது. அது அவனுக்கு ஒத்துக்கொள்ளாது.

எனவே இந்தப் பலாப்பழத்தை உரித்து, என்ன செய்வது? இதை விற்றால் பணமாவது கிடைக்கும் என எண்ணினான். ஆஸ்திகனான பிச்சைக்காரனுக்குப் பலாப்பழம் என்றால் மிகவும் பிடிக்கும். அது இருந்தால், அதன் சுளைகளை ஆண்டவனுக்கு நைவேத்தியம் செய்து, அதன் பின் சுவைத்துச் சாப்பிடலாம் என எண்ணினான். நாஸ்திகன் பலாப்பழத்திற்காக 10 ரூபா கேட்டான். அந்த விலையைக் கொடுத்து ஆஸ்திகன் அதை வாங்கிக் கொண்டான்.

ஒரு தனியிடத்துக்குச் சென்று அதனை உரித்துச் சாப்பிட எண்ணினான். ஒரு மரத்தடிக்கு வந்து, பலாப்பழத்தைக் கீறிய போது, அதிலிருந்த பொன்னையும், பொருளையும் கண்டு அதிசயித்தான். இது கடவுள் தந்த பிச்சை என்று எண்ணி, கடவுளுக்கு நன்றி சொன்னான். அதோடு மட்டுமல்லாமல், தனக்குக் கிடைத்த செல்வத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து வாழ்ந்தான். தன்னிடம் பலாப்பழத்தைத் தந்த நாஸ்திகப் பிச்சைக்காரனுக்கும் சிறிது பொருள் கொடுத்தான். இப்பொழுது அனைவருக்கும் புரிந்தது 'எல்லாம் ஈசன் செயல்' என்று.

- ஆத்மஜோதி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைரவரை வணங்கினால் பயம் போகும்!

உலகம் உய்ய மகான்கள் நமக்குக் கொடுத்துள்ள செல்வங்கள்தான் ஆலயங்கள்.

ஆலயத்தில் மூலவரோடு எத்தனையோ தெய்வங்கள் இருந்த போதிலும் ஒவ்வொரு தெய்வமும் ஒவ்வொரு விதத்தில் சக்தி நிறைந்த வர்களாக இருப்பர்.

அவ்வகையில் சிவனின் மகன்களில் ஒருவர் ஸ்ரீபைரவர். அபார சக்தி படைத்தவர். பெரிய சிவன் கோயிலில் பைரவர் இருப்பார். எல்லோரும் விநாயகரை வணங்குவார்கள். சண்டிகேஸ்வரரையும் வணங்குவார்கள். குறிப்பாக ஸ்ரீபைரவரை வணங்கவேண்டும் என்பதை அறியாமல் வந்து விடுவார்கள்.

சிவன் கோயில்களில் சிவனைப் பார்த்துக்கொண்டு பைரவர் இருப்பார். நவக்கிரகம் இருக்கும் பகுதியில் இருப்பார். இவரை வணங்குவதன் மூலம் நமக்கு எல்லா நன்மைகளையும் தேடிக்கொள்ளலாம். குரு வாரம் ஞாயிறு அஷ்டமியில் வணங்கலாம். குறிப்பாக அஷ்டமி திதியில் அர்த்த ஜாமத்தில் வணங்குவது பெரும் பலனைத்தரும்.

காவல் தெய்வமாக நம்மைக் காக்கும் தெய்வமாக விளங்குபவர் ஸ்ரீபைரவர். இவரை வணங்கினால் நாம் பெறாத பாக்கியங்கள் இல்லை எனலாம். அதிலும் ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர் ரூபத்தில் வணங்கும் போது நமக்கு அவர் வாழ்வில் ஒப்பற்ற வளங்களைத் தருகிறார். எனவேதான் முன்பு ஞான ஆலயத்தோடு ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர் படத்தைத் தந்துள்ளோம். உங்கள் பூஜையறையில் வைத்து வணங்கி வாருங்கள் உங்கள் கஷ்டங்கள் பனியென நீங்கும். சக்தி மிக்க தெய்வமான பைரவருக்கு என இருக்கும் தனிக் கோயில் பற்றி இங்கு விவரங்கள் தருகிறோம்.

பைரவருக்கு என தனிக்கோயில் இருப்பது அதிசயம். பெரிய கோயில் களில் மட்டும் பரிவார தெய்வமாக இருப்பார். பெரும்பாலும் சனியைப் போல மேற்குப் பார்த்து இருப்பார். ஆலயத்தை பூட்டும் போது இவரிடம் சாவியை வைத்து பூஜை செய்துதான் ஆலயத்தைப் பூட்டுவார்கள். சிவன் கோயிலில் இவர்தான் காவல் தெய்வமாக விளங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைரவருக்குத் தனிக்கோயில்

தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டம் திருவையாறு கிழக்கில் பைரவன் கோயில் எனும் ஊரில் பைரவருக்கு தனிக் கோயில் உள்ளது. பூலோக கைலாசம் என்றால் அது திருவையாறுதான்.

ஒருமுறை திருவையாறு வந்த சிவபெருமான் தமது பரிவாரங்களுடன் திருவையாற்றில் இருந்து சுவாமிமலைக்குப் புறப்படுகின்றார். சிவனோடு பைரவரும் புறப்படுகின்றார். தன் சடையில் உள்ள சந்திரனை திங்களூரில் விட்டு அங்கு வருபவர்களுக்கு அருள்பாலிக்கும் படி கட்டளையிடுகிறார். அடுத்து கூட வரும் பைரவரை-பைரவன் கோயில் எனும் இடத்திலேயே தங்கியிருக்கும்படி அருள்பாலிக்கிறார். "யார் வந்து உன்னை வணங்குகிறார்களோ அவர்களுக்கு எல்லா அருளையும் வழங்கு; அதற்கான அனைத்து சக்திகளையும் கொடுக்கிறேன்". என்று சொல்லி பைரவரை விட்டுச் செல்கிறார்.

பைரவர் என்ற சிறப்புப் பெயராலேயே ஊரின் பெயரும் அமைந்திருப்பது பெரும் சிறப்பாகும். காவிரியின் வடகரையில் தெற்குப் பார்த்து இந்த பைரவர் எழுந்தருளி இருக்கிறார். இவருக்கு மட்டுமே தனிக்கோயில்.

ஆலயத்தின் வலதுபுறம் தெற்கு வடக்காக ஒரு வாய்க்கால் ஓடுகிறது. அது உத்திரவாகினியாக ஓடுகிறது. எனவே காசிக்குரிய பெருமை உடையது. சந்நிதிக்கு எதிரே தூரத்தில் மயானம்-காசியில் உள்ள கால பைரவரின் அத்தனை சக்திகளையும் உள்ளடக்கியவராக இந்த பைரவர் எழுந்தருளியிருக்கிறார். இந்த ஆலயத்தில் தினமும் இரண்டு கால பூஜைகள் நடைபெறுகின்றன.

இந்தக் கோயிலுக்குக் கிழக்கில் தான் கணபதி அக்ரகாரம் மகா கணபதி ஆலயமும் உள்ளது. கணபதி அக்ரகாரம் வரும் அன்பர்கள் இந்த பைரவர் ஆலயத்தையும் வந்து அவசியம் வணங்க வேண்டும். உதாரணமாக ஒரு சம்பவம்.

இலுப்பக்கோரை மெயின் ரோட்டில் வசிப்பவர் பால்காரர் இளைஞர் புகழேந்தி. நல்ல பக்தர். மகாகணபதி ஆலயத்துக்கும் குருக்களுக்கும் பால் கொடுத்து வருபவர். இவருக்கு வியாபாரத்தில் பல சங்கடங்கள். குடும்பத்தில் நிம்மதியில்லாமல் தடுமாறினார். கணபதி அக்ரகாரம் ஓமாந்து குருக்கள் தியாகராஜசிவம் ஆகியோரின் அறிவுரைப்படி அஷ்டமி நவமியில் பைரவரை வணங்க ஆரம்பித்தார்.

பலரும் கண்டு கொள்ளாமல் இருக்கும் பைரவரை வணங்க ஊர்க்காரர்களின் ஒத்துழைப்போடு பூஜையை ஆரம்பித்தார். ஈச்சாங்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த குருக்கள் கணபதி அக்ரகாரம் தியாகராஜசிவம் ஆகியோர் தேய்பிறை அஷ்டமியில் மாதந்தோறும் பூஜையை நடத்துகின்றார் கள். இந்த ஆலயத்தில் அதையும் அர்த்த ஜாமத்தில் நடத்துகிறார்கள். பூஜை ஆரம்பிக்கப்பட்டு இப்போது பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து பைரவரை வணங்குகிறார்கள்.

## ஹோம முறை

முதலில் 2 கடங்கள் வைத்து ஸ்தாபனம் செய்கிறார்கள். அதில் சுவர்ண ஆகர்சண பைரவரையும் அம்பாளையும் ஆவாகனம் செய்கிறார்கள். 108 ஆவர்த்தியுடன் சங்கல்பம் செய்து ஹோமம் செய்கிறார்கள். உலக நலன் பக்தர்கள் நலன் விவசாயம் செழிக்க-ஊரில் கொள்ளை நோய் ஏற்படாமல் இருக்க என சங்கல்பம் செய்து பூஜை செய்கிறார்கள்.

ஹோமத்தில் 21 வகை திரவியங்களைப் போடுகிறார்கள். தேன் நெய் ஆகியவற்றில் நனைத்த செந்தாமரைப்பூவை மந்திரம் சொல்லி ஹோமத்தில் போடுகிறார்கள். பின்னர் பூர்ணாகுதி முடிந்து மூலவர் பைரவருக்கு எண்ணெய், திரவியப் பொடி, மஞ்சள் பொடி, பால், தயிர், தேன் ஆகியவற்றால் அபிஷேகம் செய்து சர்க்கரைப் பொங்கல் எலுமிச்சம் பழச் சாதம், தயிர்ச்சாதம் நைவேத்தியம் செய்து சகல தீபாராதனையும் செய்து பூஜை நடத்தி அனைவருக்கும் பிரசாதம் வழங்குகிறார்கள்.

## பைரவரை வணங்குவதால் ஏற்படும் பலன்

வியாதி தீரும். பணக்கஷ்டம் குறையும். அனைத்துக் காரியங்களும் வெற்றிகரமாக முடியும். திருமணத்தடை நீங்கும்; குழந்தையில்லாதவர்களுக்கு குழந்தைப் பேறு கிட்டும். சனிக்கிரகத் தொல்லை விலகும். இழந்த பொருட்கள் கிடைக்கும். பிறரால் எந்தக் கேடு நேர்ந்தாலும் நீங்கும்.

பால்காரர் புகழேந்தி- மற்றும் மளிகைக்கடை வைத்திருக்கும் மதி மற்றும் பலரும்-"பைரவரை வணங்க ஆரம்பித்தவுடன் ஊரும் செழிப்பாக உள்ளது. எங்கள் குடும்பமும் நன்றாக இருக்கிறது. நினைத்த காரியங்கள் நடக்கின்றன." என்று சொல்கிறார்கள்.

இந்த ஆலயம் திருவையாறு-கணபதி அக்ரகாரம் சாலையில் உள்ளது.

எனவே நாமும் ஸ்ரீ பைரவரை வணங்கி பல நன்மைகளை அடைவோம். சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்வோம்.

- ஆத்மஜோதி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம் (தொடர்ச்சி......)

## தியானத்தின் ஆறு படிகள்

இனி, இந்தத் தியானத்தின் ஆறு படிகள் எவை எவை என்று பார்க்கலாம்.

| | | |
|---|---|---|
| 1. இயமம் | 2. நியமம் | 3. ஆசனம் |
| 4. ப்ராணாயாமம் | 5. ப்ரத்யாஹாரம் | 6. தாரணை |

என்பவையே அவை!

இதன் பிறகு ஏழாவது படியாக வருவதே தியானம்.

## ஆரம்ப நிலைத் தியானம்

ஆரம்ப நிலைத் தியானத்தினால் நமக்குத் தேவையான மன அமைதியும் -

ஒருவகையான மனச்சாந்தியும் கிட்டும் என்று எவரும் எதிர்பார்த்தால், அவ்வெண்ணம் தோல்வியிலேயே நம்மைக் கொண்டு போய் விட்டுவிடும்.

தியானத்தைச் செய்பவர்கள் நல்லவர்களாகவும், தூய்மையான வர்களாகவும் இருக்க வேண்டும் என்பது விதி.

மற்றவர்களுக்குத் தியானத்தினால் ஏற்றம் கிடைப்பதை விட ஏமாற்றமே மிஞ்சும்.

ஏமாற்றம் கிட்டினால் மன உளைச்சல் ஏற்பட்டுவிடும். அப்போது தியானம் நன்மை செய்வதைவிட, தீமை செய்யும் ஒரு சங்கதியாக மாறிவிடும்.

ஏந்தி இருக்கும் வாள் பகைவர்களை அழிக்காமல், தன்னைத் தானே அழிக்க வரும் தற்கொலை முயற்சியாக மாறிவிடும்.

## தியானம் என்றால் என்ன?

தியானத்தைப் பற்றி நம் மக்களிடையே ஏகப்பட்ட ஐயப்பாடுகள்.

கேள்விகள் -

விடை காண முடியாத குழப்பங்கள் -

இன்று வரை இருந்துகொண்டே இருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தெள்ளத் தெளிவாக அறுதியிட்டுக் கூறுவார் எவருமில்லை.

எனவே நம் மக்களிடையே தொடர்ந்து மனப் போராட்டமும், பக்குவமின்மையும் இருந்துகொண்டே இருக்கின்றன.

தியானம் எனப்படுவது ஓர் பொருளின் மீது, ஒரு உருவத்தின் மீது, ஒரு பெயரின் மீது கருத்தொருமித்து மனத்தைக் குவித்துக் கண்களை மூடி இருப்பதுதான் என்று அநேகர் கருதுகின்றனர்.

ஆனால், அதுவா உண்மை?
இல்லவே இல்லை.
அதன் பெயர் மன ஒருமைப்பாடு. அதாவது Concentration

மன ஒருமைப்பாடு என்பது சிரத்தையுள்ள எதன் மீதும் எவர் மீதும் வரும்.

## மன ஒருமைப்பாட்டின் ஆற்றல்

நீண்டநாள் தன்னை விட்டுப் பிரிந்திருக்கும் கணவனை எண்ணி ஏங்கும் பெண் -

காதலியை நினைத்து நினைத்து சோகத்தில் தாடி வளர்க்கும் இளைஞன் -

தேர்வினை எதிர்நோக்கி இரவு, பகலாகத் திசை திரும்பாது பாடங்களை உன்னிப்பாகப் படிக்கும் மாணவன் -

புதிய கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்துத்தான் தீரவேண்டும் என்ற வெறியுள்ள விஞ்ஞானி -

உபந்யாசங்களை, பட்டி மன்றங்களை, கட்சிக்காரர்களின் கனல் கக்கும் பேச்சுக்களை கண் இமைக்க மறந்து கேட்டுக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டம்.

பாலுணர்வுகளைத் தூண்டிவிடும் நூல்களைப் பருவக் கிளர்ச்சியுடன், தனியறையில் அமர்ந்து எவருக்கும் தெரியாமல் படித்துக்கொண்டிருக்கும் டீன் ஏஜ் வயதுப் பிராயத்தினர் -

ஆகியவர்கள் கூட ஒரு வகையில் தியானம் செய்பவர்களைப் போன்றவர்களாவர். மன ஒருமைப்பாட்டைத் தியானம் என்ற பெயரில் அழைத்தால்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தியானமும், மன ஒருமைப்பாடும் வேறு வேறானவை. அதனைத் தியானம் என்ற பெயரில் அழைக்கக் கூடாது.

இதைத்தான் முதன் முதலில் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

## உண்மையான தியானம் எது?

அப்படி என்றால் உண்மையான தியானம் என்றால் என்ன? என்ற வினா எழுப்பலாம்.

அதாவது, வெளியே, நம்மையும் அறியாமல் திசை தெரியாது, தறிகெட்டு ஓடும் மனத்தினைப் பிடித்து நிறுத்தி –

அதன் வழித்தடத்தை மாற்றி –
உள்முகமாகத் திசை திருப்பி –

மனம் எங்கிருந்து பிறக்கிறதோ, அந்தப் பிறப்பிடம் எதுவோ–
அதனைத் தேடிக் கண்டுபிடிக்கச் செய்வதே தியானம்.
கஷ்டமாக இருக்கிறதா?
இதனை உதாரணத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

## உதாரணத்திற்கு ஒரு கதை

ஒரு கொடிய காடு. அமாவாசை இருள் சூழ்ந்திருக்கிறது.

அந்தக் காட்டிற்குள் சென்று வேட்டையாட நான்கு நண்பர்கள் செல்கின்றனர். ஓரிடத்தில் பாதை நான்கு திசையிலும் பிரிகிறது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் சென்று வேட்டையாடி விட்டு, புறப்பட்ட இடத்துக்கு வந்து சேர்ந்துவிட வேண்டும் என்று பேசிக்கொண்டு பிரிந்தனர்.

ஒருவன் மிக வேகமாக வேட்டையை முடித்துக் கொண்டு வந்தான். மற்றவர்களின் வருகையை எதிர்நோக்கி அவன் காத்திருந்தான்.

அப்போது யாரோ ஒருவன் அப்பாதையில் வந்தான். உடனே காத்திருந்தவன், தன் கையில் உள்ள டார்ச் லைட்டினால் அவன் முகத்தைப் பார்க்கிறான்.

தன் நண்பன்தான், திருப்தி ஏற்படுகிறது, உடனே வந்தவன், முதலில் வேட்டையாடிவிட்டு அங்கே காத்திருப்பவன் யார் என்று எண்ணுகிறான்.

இவன் தம்மவனா என்ற சந்தேகமும் அவனுள் எழுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அவன் டார்ச்சுடன் நின்றவனைப் பார்த்து "எங்கே அந்த விளக்கு வெளிச்சத்தை உன் முகத்தின் மீது திருப்பு, நீ யார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்" என்று கூறுகிறான்.

வந்தவன் வேண்டுகோளுக்கிணங்க, இருந்தவன் தன் முகத்தின் மீதே டார்ச் அடித்துக் காண்பிக்கிறான்.

வந்தவன் நிம்மதி அடைகிறான்.

அதைப் போன்றதுதான் இதுவும்.

வெளியே ஓடும் மனது என்பது வெளியேறிய பாதையைப் பார்க்கும் வெளிச்சம் - இதனைத் தடுத்து நிறுத்துவது என்பது, அந்த நண்பனைத் தடுப்பதற்கு ஒப்பாகும். உள்முகமாகத் திசை திருப்புதல் என்பது, அவன் முகத்தில் அவனே வெளிச்சமிட்டுக் காட்டுவதுபோல

மனத்தின் பிறப்பிடம் என்பது — எங்கிருந்து அவர்கள் பிரிந்தார்களோ அந்த இடம் என்பதாகும்.

தேடிக் கண்டுபிடித்தல் என்பது – தெளிவாக அறிந்து கொள்ளுதல் - மனச்சாந்தியடைவது என்பது தியானம் என்பது அவனைக் கண்ட பிறகு ஏற்படும் நிம்மதிக்குச் சமம்.

## கடினமான செயல்

பொதுவாக, வெளியே தறிகெட்டு ஓடும் எண்ணங்களையும், தாறுமாறாக அலையும் நினைவலைகளையும் தடுத்து நிறுத்தி –

உள் முகமாகத் திரும்பி அனுப்புவது என்பது எல்லோருக்கும் ஏற்ற ஒரு செயலாக, எளிதான ஒரு பணியாக இருப்பதில்லை.

அதன் போராட்டம், ஒரு பலவீனமான மனிதனுக்கும், பலமுள்ள ஒரு சிங்கத்திற்கும் இடையே எழக்கூடிய போராட்டத்தைப் போன்றதே ஆகும்.

இந்தக் கடினமான செயலிலிருந்தே நீங்கள் தியானத்திற்கும், மன ஒருமைப்பாட்டிற்கும் வித்தியாசத்தை அறிந்துகொள்ள முடியும்.

## வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளுங்கள்

மன ஒருமைப்பாடு என்பதற்கும், தியானத்திற்கும் உள்ள அடிப்படை வித்தியாசத்தைப் புரியாதவர்கள்தான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு ஏற்பட்ட மன ஒருமைப்பாட்டைத் தியானம் என்ற பெயரிலே கூறிக்கொண்டு —

அதில் தாம் வெற்றி அடைந்து விட்டதாகவும் பறை சாற்றிக் கொள்கிறார்கள். அல்லது பிறருக்கு உபதேசம் செய்ய முன் வருகிறார்கள்.

உண்மையில் மன ஒருமைப்பாடு என்பது வேறு — தியானம் என்பது வேறு — என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் - மன ஒருமைப்பாடு எனப்படுவது, நம்முடைய மனத்தை ஏதாவது ஒரு புறப் பொருளின் மீது, உருவத்தின் மீது, பெயரின் மீது குவிப்பது.

உதாரணமாக அழகான சிற்பம் ஒன்றின் மீதோ —

அழகிய உருவப்படத்தின் மீதோ —

'ஓம்' என்ற பெயர் பொறித்த பலகையின் மீதோ —

எரியும் மெழுகுவர்த்தியின் சுடர், சுவரில் வைக்கப்பட்ட கரும்புள்ளி—

விண்ணில் தெரியும் குறிப்பிட்ட நட்சத்திரம் - மண்ணில் வரையப்பட்ட கோலம் — ஆகியவற்றின் மீதோ குவிப்பது.

தியானம் எனப்படுவது, நம்முடைய மனத்தை அது உண்மையிலேயே எங்கிருந்து பிறக்கின்றதோ அங்கேயுள்ளமையப் பகுதியில் குவிப்பதாகும்.

இனி, தியானத்தின் முறைகளைத் தெரிந்து கொள்ளுவோம்.

## தியானத்தின் சரியான முறைகள்

நம்முடைய சிரசின் உச்சியில் ஒரு தாமரை இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளவும்.

அந்தத் தாமரையின் மையப் பகுதியை நற்குணமாக எண்ணிக் கொள்ளவும் - அதன் காம்பை ஞானமாக எண்ணவும் -

தாமரையின் எட்டு இதழ்களையும், ஒரு யோகியானவர் பெறுவதற்குத் தகுதியான அஷ்டமா சித்திகள் என்று கருதவும்.

உள்ளே இருக்கக்கூடிய மகரந்தக் கோசரங்களையும் -

சூலகத்தையும் இவ்விதமான அஷ்டமா சித்திகளையும் துறக்கக்கூடிய பெருந்தியாகம் என்று எண்ணவும்.

அந்தத் தாமரையின் உள்ளே பொன்னைப் போன்று பிரகாசிக்கக் கூடியவராய் -

அவ்வளவு சீக்கிரத்திலேயே அறிவதற்கு அரிதானவராய் -
மஹா சர்வ வல்லமை பொருந்தியவராய் -
ஓங்காரம் என்ற பெயரை உடையவராய் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுவதற்கு அரிதானவராய் -

கண்களைக் கூச வைக்கும் மிகப் பேரதிசயமான மகத்தான ஒளியினால் சூழப்பட்டவராய் - உங்களுடைய இறைவனை எண்ணி மனத்திலே தியானத்தைச் செய்யுங்கள் -

## உபநிஷதங்கள் உணர்த்தும் உண்மைகள்

உபநிஷதங்கள் தியானத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, அவை திரும்பத் திரும்ப வலியுறுத்துவது எல்லாம் ஆத்மார்த்தமான இதயம் ஒன்றைத்தான்.

இந்த ஆத்மார்த்தமான இதயம்தான் மனத்தின் உண்மையான மையமாக விளங்குகின்றது.

எந்த விதமான முன் பாடங்களும் தெரியாத ஒருவன் நாளாவட்டத்தில் ஆத்மீக இதயத்தைப் பற்றித் தெரியாதவனாக - கருத்தில் கொள்ளாதவனாக -

மேலெழுந்தவாரியான தியான முறையிலேயே ஈடுபடுகின்றான்.

இந்தத் தியான முறை, வெறும் முயற்சி என்ற ரீதியில் மட்டுமே இருக்குமேயன்றி -

அதில் வெற்றி பெற எந்த வழியும் இல்லாது போய்விடும்.

## தோல்விக்கான காரணம்

தியானத்தில் ஈடுபடும் ஒருவன், மேலே சொல்லப்பட்ட ஆத்மீக இதயத்தைத் தேடும் பணியிலேயே தன் தியான வாழ்வை -

அல்லது நேரத்தைச் செலவழிப்பவனாகின்றான்.

அதனால் அவனுடைய மனது இடைவிடாது சஞ்சலப்பட்டுக் கொண்டும் -

போராடிக் கொண்டும்தான் இருக்கும்.

இந்தப் போராட்டத்தின் இறுதி விளைவாக மனச்சோர்வு, மன உளைச்சல் -

போன்றவற்றைச் சந்திக்க வேண்டிய கால கட்டாயமாகி விடுகின்றது.

இந்த மன உளைச்சல், தியானத்தினால் மகிழ்ச்சி ஏற்படும் என்ற நிலைமையை விட்டுவிட்டு -

எிச்சலையும், உற்சாகமின்மையையும் தோற்றுவித்து விடுகின்றன.

எனவே தியானத்தில் எச்சரிக்கை தேவை!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தானைக்குட்டி தரிசனம்

*ஆத்மஜோதி அவர்களின் ஸ்தல யாத்திரை - தொடர்ச்சி*

பெருநாளி என்பது இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஓர் ஊராகும். இது ஒரு இராச்சியமாக இருந்தது. இந்த இராட்சியத்தில் ஒருமுறை கொள்ளை நோய் ஒன்று பரவியது. பலர் இந்த நோய்க்குப் பலியானார்கள். சில குடும்பங்களில் எவருமே மிஞ்சவில்லை. ஒருநாள் இரண்டு சாதுக்கள் தோன்றினார்கள். வீடுவீடாகச் சென்று பிச்சை எடுத்தார்கள். சிலர் பிச்சையிட மறுத்தார்கள். பிச்சையிட மறுத்தவர் களிடம் வற்புறுத்தி வாங்கினார்கள். அவர்கள் பிச்சை பெற்ற வீடுகளில் திரும்ப அந்த நோய் காணப்படவில்லை. அவர்களிடம் இருந்த நோய்களையே மறைமுகமாகப் பிச்சையாக ஏற்றார்கள்.

இந்த இரண்டு சாதுக்களின் சேவையைப் பெருநாளி அரசர் கேள்விப்பட்டார். இந்தச் சாதுக்களைக் கௌரவிக்க வேண்டும் என்று அரசர் நினைத்தார். தனது மகன் கோவிந்தசாமியை அந்த இரு சாதுக்களையும் தேடி அழைத்து வருமாறு அரசர் அனுப்பினார். கோவிந்தசாமி பல இடங்களிலும் தேடி அலைந்து திரிந்து கடைசியில் ஓர் இல்லத்தில் இரு சாதுக்களையும் சந்தித்தார். கோவிந்தசாமி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பின் தன் தந்தை அவர்களை அழைத்ததாகக் கூறினார். சாதுக்கள் இருவரும் பலமாகச் சிரித்து உங்கள் அப்பாவின் பாராட்டுதலுக்காக நாம் ஏதும் செய்யவில்லை. நீயும் உன் வழியே செல். நாங்கள் எங்கள் வழியே செல்கின்றோம் என்றனர். ஆனால் கோவிந்தசாமி திரும்பி வீட்டுக்குச் செல்லவே இல்லை. சாதுக்கள் இருவருடனும் பெருநாளி இராச்சியத்தை விட்டு வெளியேறினார், சாதுக்களும் வெளியேறினர். அந்தச் சாதுக்கள் கோவிந்தசாமி தம்முடன் வருவது பற்றி ஆட்சேபம் எதுவுமே தெரிவிக்கவில்லை. இருவர் இப்போது மூவரானார்கள். மூவரும் வடநாடு சென்றார்கள். தீர்த்த யாத்திரையை முடித்துக்கொண்டு மூவரும் தூத்துக்குடி சென்றார்கள். அங்குள்ள செட்டியார் கணக்கப்பிள்ளை ஒருவரிடம் கொழும்பு செல்வதற்கு கப்பல் ரிக்கட் வாங்கி வருமாறு பணித்தனர். கணக்கப்பிள்ளை இரண்டு ரிக்கற்றுடன் தான் வந்தார். மூன்றாவது ரிக்கற் இல்லை என்று கணக்கப்பிள்ளை கூறினார். பெரியவர்கள் இருவரும் இரு ரிக்கற்றுக்களையும் பெற்றுக்கொண்டார்கள். கோவிந்தசாமி அதைப்பற்றி எவ்வித கவலையும் கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விருவரும் தாம் பெரியானைக்குட்டியும் நவநாத சித்தரும். பெரியானைக்குட்டியின் சமாதி கொழும்பு முகத்துவாரத்திலும் நவநாத சித்தரின் சமாதி மலையகத்தில் குயீன்ஸ்பரி என்ற தோட்டத்திலும் இருக்கிறது.

கோவிந்தசாமி மற்றைய இருவரையும் கப்பலேற்றிய பின் அங்கேயே நின்றுவிட்டார். கப்பல் கொழும்புத் துறைமுகத்தை அடைந்தது. அக்கப்பலில் வந்தவர்களை வரவேற்கப் பலர் வந்திருந்தார்கள். அவர்களுக்குள்ளே கோவிந்தசாமியும் காணப்பட்டார். கோவிந்தசாமியைக் கண்ணுற்ற சாதுக்கள் இருவரும் எவ்வித ஆச்சரியத்தையும் காட்டிக்கொள்ளவில்லை.

நவநாத சித்தர் மலைநாடு சென்றுவிட்டார். பெரியானைக்குட்டி கொழும்பில் தங்கினார். கோவிந்தசாமி பெரியானைக்குட்டியையே குருவாகக் கொண்டு சித்தானைக்குட்டியானார். பெரியானைக்குட்டியின் சமாதியின் பின் சித்தானைக்குட்டி தனித்தவரானார்.

சித்தானைக்குட்டி கதிர்காம யாத்திரையை மேற்கொண்டார். திசைமகறாகமவில் ஓர் ஓவசியர் வீடு. அங்கு கணவன் மனைவி இருவருமேதாம். ஓவசியர் ஒரு குடிகாரர். குடிகாரனுக்கு வாழ்க்கைப் பட்ட அந்த அம்மையார் ஒரு சுகத்தையும் அனுபவித்தாருமில்லை.

சித்தானைக்குட்டி சுவாமி ஓவசியர் இல்லாத நேரத்தில் ஓவசியர் வீட்டிற்குச் செல்வார். அம்மையார் கொடுப்பதை முற்றத்தில் நின்றபடியே வாங்கி அருந்திவிட்டு நின்ற நிலையிலேயே தண்ணீரும் வாங்கிக் குடித்துவிட்டு தன் வழியே சென்று விடுவார். ஓவசியருக்கு சாதுக்களைக் கண்டால் பிடிக்காது. அம்மையாரோ சாதுக்களைக் கடவுளாகக் கருதியே அவர்களுக்குச் சேவை செய்வார். சாதுக்களின் சேவையினால் அந்த அம்மையார் அமைதியும் சாந்தமும் பெற்றார்.

குடியினால் ஓவசியருக்கு வேலை போயிற்று. ஆனால் அவர் குடியை விடவில்லை. உழைப்பில்லாமல் எத்தனை நாளைக்குத்தான் குடிக்கமுடியும். ஓவசியரின் பொருளாதாரம் வீழ்ந்தது. எல்லாப் பொருட்களும் விலைப்பட்டுவிட்டன. ஓவசியருடைய மனைவி தனது சீதனக்காணியை சுவாமி பேரிலேயே எழுதி வைத்துவிட்டார். இதனை ஓவசியர் அறியார். சுவாமிகள் முன்கூட்டியே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காரைதீவு சென்றடைந்துவிட்டார். அங்கேதான் ஓவசியர் மனைவியின் காணியும் இருந்தது. அக்காணிக்குள் ஒரு சிறு வீடு அமைத்து ஓவசியர் அம்மா இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவசியர் அம்மா சித்தானக்குட்டியின் பிரதம சிஷ்யை ஆகிவிட்டார். சுவாமியும் சிஷ்யையும் ஒரு வீட்டில் வாழ்ந்த படியினால் உலகத்தவர் கண்ணுக்கு கணவன் மனைவியுமாகவே பட்டனர். இதுதான் உலகம் இந்த நிலையில் சுவாமி வாழ்ந்துகொண்டிருக்கும் போதுதான் அடியேன் ஒருநாள் காரைதீவு சென்று சுவாமிகளுடைய ஆச்சிரமத்தை அடைந்தேன். சுவாமிகளுடன் ஏழெட்டுப் பேர் ஏதோ சம்பாசித்துக் கொண்டிருந்தனர். அடியேன் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்றேன். சுவாமிகள் கையினால் அமரச் சொன்னதும் அமர்ந்தேன்.

அவரது முதல் தரிசனத்திலேயே அவர் ஒரு பெரிய மகான் என்பதை அடியேனால் உணர முடிந்தது. அவர் முன்னிலையில் இருந்து சுவாமிகளைத் தியானித்தேன். உள்ளத்தில் ஓர் அமைதி பிறந்தது. அந்த அமைதியிற் கண்களைத் திறந்தேன் சுவாமிகளின் திருவுருவம் பேரொளிப் பிளம்பாகத் தோன்றியது. அயலில் இருந்தவர்கள் எல்லோருமே தியான நிலையில் காணப்பட்டனர்.

சுவாமிகளின் முன்னிலையில் ஒரு சாராயப் போத்தல் உடைக்காமல் முழுதாகவே இருந்தது. கொழும்பிலிருந்து 3,4 பேர் சுவாமிகளைத் தரிசிக்க மோட்டாரில் வந்திருந்தனர். சுவாமிகளின் சீடர் ஒருவர் கொழும்பில் இருந்து வந்தவர்களுக்குச் சாராயப் போத்தலை உடைத்து சிரட்டைகளில் ஊற்றிக் கொடுத்தார். ஒருவர் மறுத்தார். வேண்டாம் என்றார். சுவாமி வற்புறுத்தினார். தான் சைவம் என்றார். நாங்களும் சைவந்தானே என்றார் சுவாமி.

கொழும்பில் இருந்து வந்த மற்றொருவர் மறுத்த நண்பரிடம் இது சாராயம் அல்ல; உனது நோய்க்கு மருந்து என்றார். வாங்கிக் குடித்தார். மாறாமல் இருந்த வயிற்று வலி உடனே மறைந்து விட்டது. அவருடைய வாய்க்கு இனிமையான நன்னாரி சர்பத் போல இருந்தது. "சுவாமி மன்னிக்க வேண்டும். சுவாமியின் பெருமை தெரியாமல் மறுத்து விட்டேன். அடியேனை மன்னித்துக் கருணை காட்டுங்கள்" என்றார். பல்லாண்டுகளாக மாறாமலிருந்த வயிற்று வலி எங்கோ மறைந்து விட்டது.

'சுவாமி இன்னுங் கொஞ்சந் தாருங்கள்' என்றார். சுவாமி தன் கைப்படச் சிறிது ஊற்றிக் கொடுத்தார். அன்பர் அருந்தினார். முகத்தைச் சுழித்தார். 'அது மருந்து, இது சாராயம்' என்றார் சுவாமிகள்.

கண்ணனும் அர்ச்சுனனும் ஒரு நாள் மாலை வயல் வெளிப் பக்கமாகச் சென்றார்கள். ஊர்க்குருவி பறந்தது. அதனைக் கண்ணன் காகம் என்றான். அர்ச்சுனன், ஆம் என்றான். முட்டாள் அது பருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லவா என்றான் கண்ணன், அருச்சுனன் சரிதான் என்றான். "அர்ச்சுனா நன்கு கவனி, அது கழுகு" என்றான் கண்ணன். அர்ச்சுனன் அதற்கும் சரிதான் என்றான். கண்ணன் அர்ச்சுனனைத் தட்டிக் கொடுத்தான்.

"கண்ணா உன்னால் ஊர்க்குருவியை காகமாக்க முடியும், காகத்தைப் பருந்தாக்க முடியும், பருந்தை கழுகாக்க முடியும். உனது கண்ணுக்கூடாகப் பார்ப்பதுதான் எனது வேலை" என்றான் அர்ச்சுனன். சுவாமிகள் இதுதான் பூரண சரணாகதி என்று விளக்கம் கொடுத்தார்கள்.

ஒருமுறை கல்முனை நெல்வயல் எல்லாம் மழை இன்மையால் வரண்டு காய்ந்து கிடந்தன. நெல் கதிர்வரும் பருவம். இந்த நேரத்தில் மழை பெய்யாவிட்டால் வேளாண்மையே கிடையாது. கமக்காரர் எல்லோரும் ஒன்று சேர்ந்தார்கள். சுவாமியிடம் சென்று முறையிட்டார்கள்.

"நான் என்ன கடவுளா? கோயிலிற் சென்று குடும்பிடுங்கோ" என்று கூறினார் சுவாமிகள். மக்கள் ஒரே குரலில் "நீங்கள்தான் எங்களுடைய கடவுள்" என்றார்கள். எழுந்து போக மறுத்தார்கள். "சரி எல்லோரும் சென்று அவரவர் வயலுக்குள் நில்லுங்கள்" என்றார் சுவாமிகள். ஒரு சிலர் மற்ற வயலுக்குப் பெய்யும் மழை நமக்கும் பெய்யுந்தானே என்று வீட்டிலேயே இருந்துவிட்டார்கள். சுவாமிகள் சென்றார்கள். வரம்பில் கிடந்த மணலில் ஒரு பிடி எடுத்தார்கள். ஆகாயத்தை நோக்கி வீசினார்கள். மழை சோனாவாரியாகப் பெய்தது. ஆட்கள் இல்லாத வயலுக்குள் ஒரு துளி மழை தானும் இல்லை. மழை பெய்யாத வயலுக்குரியவர்கள் எல்லோரும் சுவாமியிடம் ஓடினார்கள். சுவாமியின் முன்னே அடித்துப் புரண்டு அழுதார்கள். சுவாமிகள் எனக்கு முன்னே அழுது புரண்டு என்ன பயன்? உங்கள் வயலுக்குள் சென்று அடித்துப் புரண்டு அழுங்கள் என்றார். ஒருவர் மாத்திரம் ஓடி வயலுக்குள் நின்று அழுதார். அவருடைய வயலுக்கு மாத்திரம் மழை பொழிந்தது. மற்றவர்கள் இந்தப் பரீட்சையிலும் தவறி விட்டார்கள்.

ஒருநாள் சுவாமிகள் கல்முனைச் சந்தியில் நின்று கொண்டிருந் தார்கள். ஒரு பக்தர் கதிர்காமம் போய்க்கொண்டிருந்தவர் சுவாமியைக் கண்டதும் சுவாமியை நோக்கி வந்துகொண்டிருந்தார். கிட்ட வந்ததும் வணங்கினார். தான் கதிர்காமம் செல்வதாகக் கூறினார். "நல்லது வா இருவரும் சாப்பிடுவோம். சாப்பிட்டபின் செல்லலாம்" என்றார். இருவரும் சாப்பாட்டுக் கடை வைத்திருக்கும் அம்மாவிடம் சென்றனர். அம்மா இருவருக்கும் இலை போட்டு உணவு பரிமாறினார். கறி மீன் குழம்பு. சுவாமியின் இலையில் மீன் விழுந்ததும் "நான் விரதம் சுவாமி கதிர்காமம் முடியும் வரை சாப்பிடுவதில்லை" என்றார் பக்தர். சுவாமி "நானும் விரதந்தான். ஒருவருக்குச் சாப்பாடு கொடுத்துச் சாப்பிடுவதுதான் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதம்" என்றார். சுவாமியின் வற்புறுத்தலால் சாப்பிடத் தொடங்கினார். அது மீன்குழம்பு அல்ல. அது வாழைக்காய்க் குழம்பு.

மகான்கள் வாழைக்காயை மீனாக்குவார்கள். மீனை வாழைக்காய் ஆக்குவார்கள். அது அவர்களுடைய இயல்பு.

கதிர்காமம் செல்ல இருந்தவர் சுவாமியை விழுந்து வணங்கிச் சுவாமியினுடைய ஆசியைப் பெற்று கதிர்காமம் சென்றார். அன்பர் கோயிலில் வணங்கிக் கொண்டு நின்ற போது கதிர்காமம் திரை எரியக் கண்டார். சித்தானைக் குட்டி சுவாமிகள் அத்திரை எரியாமல் கசக்கி அணைத்ததையும் கண்டார். சுவாமி எப்படி அந்த நேரம் வந்திருக்க முடியும் எனச் சிந்தித்தார். தனது வழிபாடுகள் எல்லாம் முடிந்து ஊருக்குத் திரும்பினார். திரும்பும் போது அதே கல்முனைச் சந்தியில் ஒரு மதகின் மேல் சுவாமி இருக்கக் கண்டார். ஓடோடியும் சென்று வணங்கினார். "நீங்கள் எப்போ வந்தீர்கள்" என்று அன்பர் கேட்டார். சுவாமிகள் "நான் எங்கும் சென்றதில்லை. இங்குதான் இருக்கிறேன்" என்றார். அன்பரால் அதனை நம்பவே முடியவில்லை. என்னைப்போல இந்த உலகத்தில் எத்தனைபேர் இருக்கிறார்கள். நீர் பார்த்தவர் ஏன் அவர்களில் ஒருவராக இருக்க முடியாது?" என்றார்.

காரைதீவு வாசிகளுக்குச் சுவாமிகளைக் கண்ணில் காட்ட ஏலாது. அவர் ஒரு பெண்பிடி சாமி என்று கூறி அவரை யாரும் அணுகுவதில்லை. அதனால் ஏற்பட்ட நஷ்டம் அவர்களுக்கே அன்றிச் சுவாமி களுக்கு ஓர் இழப்பும் இல்லை. சுவாமி தன்னை ஒரு பைத்தியக்காரன் போலத்தான் காட்டிக்கொண்டார். இந்த இயல்பு பல மகான்களிடம் காணப்படுகின்றது.

அடியேன் சில நாட்கள் காரைதீவில் தங்கி முப்பெருஞ் சித்தர் என்ற நூலை எழுதினேன். நவநாத சித்தர், பெரியானைக்குட்டி, சித்தானைக்குட்டி ஆகிய மூவருந்தான் அந்தப் பெருஞ் சித்தர்கள் ஆவார்கள். அந்த நூல் காரைதீவிலேயே அரங்கேற்றம் பெற்றது. அந்த நூலை வாசித்த பின் தான் சுவாமிகளின் மகிமையைக் காரைதீவு வாசிகள் அறிந்துகொண்டார்கள். அதன் பின்பு சுவாமிகளுடைய சமாதியில் ஆடிச் சுவாதியில் குருபூஜை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காரைதீவு மக்கள் எல்லோருமே அதில் பங்கு கொள்கிறார்கள். அயலூர்களில் இருந்தெல்லாம் மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து பங்கு பெறுகின்றார்கள்.

அடியேனும் பல குரு பூஜைகளில் பங்கு பெறும் வாய்ப்பைச் சித்தானைக்குட்டி சுவாமிகள் அருளினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணியும் கருப்பணியும்

- பேரறிஞர் முருகவே பரமநாதன் -

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

திருமுறை 5:10.9

தகப்பன்சாமி என வரு பெருமாளே! புவிதனில்
எனக்குண்டாகு பணிவிடை
கணக்குண்பாதல் திருவுளம் அறியாதோ.

திருப்புகழ் 1178

பணி, சேவை, தொண்டு, பணிவிடை ஊழியம் என்பன ஒத்த கருத்தான பதப் பிரயோகங்கள். கடமை தவறாமல் நடப்பவர் கண்ணியமானவர்கள். சேவை மனப்பான்மை மனிதப் பண்புகளில் ஒன்று. பிறர்க்கு உபகாரியாய் இருப்போர் உயர்ந்தவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, வாழ்வியல் தடங்கள், பக்குவம், மனிதப் பண்புகளில் ஒன்று. பெண் பக்குவப்படல் (சாமர்த்தியம்) பெண்மையின் பெருந்தகைமை. தம்கருமஞ் செய்வார் தவம் செய்வார். இதுவே கீதை காட்டும் சுவதர்மம் எனலாம். கடமையைச் செய் பலனை எதிர்பாராதே. இது கீதைக் கோட்பாடு. பயன் கருதாச்செயல் மிகமிக உன்னதமானது. குறியெதிர்ப்பை பிரதியுபகாரத்தை எதிர்பாராமற் செய்வது தொண்டு. மக்கள் சேவையே மகாதேவன் தொண்டு. தொண்டு செய்பவர் தொண்டர்கள். இவர்கள் தன்னலம் பாரார். பரநலமே இவர் இலக்கு. முகில்மழை பெய்கிறது. அதற்கு நன்றி சொல்வார் யாருமில்லை. நன்றியை அது எதிர்பார்ப்பதுமில்லை. இதன் நலம் சொல்லிக்கட்டாது; சொற்கடங்காது.

**கைம்மாறு கருதாக் கடப்பாடு மாரிமாட்**
**டென்னாறுங் கொல்லோ உலகு.**

- திருக்குறள் 211.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரி-முகில் மேகம் கடப்பாடு-ஒப்புரவு. உலக நடையறிந்து ஒழுகுதல் ஒப்புரவு. ஒப்புரவொழுகு என்றார் அவ்வை. வள்ளுவர் இதை வடித்துக் காட்டிய விதமே ஒரு புதுமை.

**ஒப்புரவினால் வருங்கே டெனில் அஃதொருவன்**
**விற்றுக் கோள்தக்க துடைத்து.**

- திருக்குறள் - 220

ஒப்புரவினால் பொருட்கேடு வராது. வந்தாலுங் கூடத் தன்னை விற்றும் அதைப் பெறவேண்டும் என ஆசங்கை இன்றியே சொல்கிறார். இன்னொன்று கண்ணோட்டம். கண்ணோட்டமாவது தன்னோடு தொடர்புடையார் மாட்டு அன்பு நிகழ்வதை அவ்வழி நன்மை செயற் படுவதை மறுக்க முடியாதது. கண்ணோட்டம்-இரக்கம். இதனாற்றான் உலகம் நிலைபெறுகிறதென்பது வள்ளுவர் கூற்று.

**கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை**
**உண்மையான உண்டிவ் வுலகு.**

- திருக்குறள் - 571

இந்தப் பணி சமூகப்பணி, தெய்வப்பணி, அரசபணி, சமயப்பணி, கல்விப்பணி, வைத்தியப்பணி, அன்பர்பணி எனப் பல திறப்படும். எல்லாவற்றுக்கும் மனித நேயம். அன்புதான் அடிப்படை. போர் முனையிலே செயற்படும் செஞ்சிலுவைச் சங்கம் அன்னை தெரேசா ஆற்றிய மனிதப்பணி வைத்தியசாலையில் அருட்சகோதரிகள் ஆற்றும் உயிர்ப்பணி உயர்வானவை. சேவை மனப்பான்மை எல்லோர்க்கும் அமையாது. அவர்கள் புண்ணியாத்துமாக்கள். பசி தீர்ப்பது, வறுமையை மாற்றுவது, இல்லார்க்கு உதவுவது, ஏழைச்சிறார்க்கு கல்வி வசதி செய்வது சிறந்த பணிகளாம். இந்தக் கல்விப் பணியின் மேன்மையைப் பாரதியார்-

**இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்**
**இனியநீர்த்தண் சுனைகள் இயற்றல்**
**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதி னாயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர்வி ளங்கி ஒளிர நிறுத்தல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்**

- வெள்ளைத் தாமரை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பாடினார். இன்று சைவாலயங்களிலே ஏடு துவக்கச் சீட்டுப் பெற வேண்டிய நிர்க்கதி. ஆலயத் தொண்டு இருந்தவாறென்னே!

தவப்பணிகள் அவப்பணிகள் ஆவதும், சிவப்பணிகள் பவப்பணிகள் ஆவதும், திருப்பணிகள் கருப்பணிகள் ஆவதும் பாவத்தைக்கட்டிச் சுமப்பதாகும். இந்து மதம் பெயரளவில் இந்து தர்மம் என அழைக்கப்பட்டாலும் அது அதர்மத்தின் வழிச் சென்றால் முடிவு என்னாகும்?

மனுநீதிச் சோழன் காட்டிய தர்மத்தின் வழியே மேன்மை கொள் சைவ நீதியாம்.

பணி என்பதன் பொருளமைவு பற்றிச் சிறிது சிந்தித்தோம். இனித் திருப்பணி கருப்பணி பற்றிப் பார்ப்போம். பனையில் இருந்து வடிக்கும் பதநீர் கருப்பணியென மக்கள் பேச்சில் வழங்குவது யாவரும் அறிந்த உண்மை. மற்றொரு பொருளில் கரு என்றால் மீண்டும் அன்னை வயிற்றிற் கருவாகி, உருவாகி, உயிராகிப் பிறப்பதை இது குறிப்பிடுகிறது. இதன் உட்பொருளை விளக்கிய என் குருநாதர்(திருக்கேதீசுவரம்) சபாரத்தினம் சுவாமிகள் திருப்பணியைச் செய்யப் போய் அது கருப் பணியாக மாறக்கூடாது என்பார்.

திரு என்பதற்கு பல பொருள் உண்டு. இங்கே இறைவன் கடவுள் தெய்வம் என்ற பொருளில் வருகிறது. ஆக ஆண்டவனுக்கு அவனோடு தொடர்புடைய அத்தனைக்குமாகப் பணி செய்யப் போய் அவ்வழியில் நடந்தாற் பாவமாம். அந்தப் பாவமே மீண்டும் பிறக்கவைக்கும். அதுவே மீண்டும் மீண்டும் பிறவிக்கு வித்தாகும். எனவே பிறவியை வேறுக்க வந்த பிறவி மீண்டும் மீண்டும் பிறவியெடுக்க வைக்கும். ஆதலின் தெய்வப்பணியான திருப்பணியாற்றுவோர் தவவாழ்வுடையவராய் வாழ்ந்து இறை கைங்கரியமென்ற எண்ணத்தோடு சிவார்ப்பணமாய்ச் செய்ய வேண்டும். இதில் நின்று மயிரிழை தவறுவோரும் இறைவனது கீழ்க்கணக்கில் இடம்பெற்றுத் தண்டிக்கப்படுவர். நீர்போம் பாதையில் கட்டுமரம் போவது போல வினைவழிப்படும் ஆருயிர் என்பது ஆன்றோர் வாக்கு. குளிக்கப் போய்ச் சேறு பூசுவது போலத்தான் திருப்பணி செய்யப் போய் அடுத்த பிறவிக்கு அது காரணமாவது. நல்வினையால் நன்மை வரும் தீவினையாற் துன்பம் வரும். திரிகரண சுத்தி கடவுட்பணிக்குத் தேவை. இப்புனிதமான பணியை நீதிவழி ஆற்ற வேண்டும். அன்றேல் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்க வேண்டும். எனவே நாம் மேற்கொள்ளும் தெய்வப்பணி ஒவ்வொன்றும் நம் உய்தி தருவதாய் அமைய வேண்டும். பெயருக்கும் புகழுக்கும் மதிப்புக்குமாக நாம் செயற்படல் சாலது. பட்டங்கள், பட்டாடைகள் இல்லாத ஆடம்பரமற்ற அமைதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டே மேலானது. அப்படியான தொண்டர் தம் தொண்டர் என நம்மாழ்வார் பேசுகிறார் தாயுமானாரும்.

**'அன்பர் பணி செய்யஎனை ஆளாக்கிவிட்டு விட்டால்**
**இன்பநிலைதானே வந்தெய்தும் பராபரமே'**

என்று பாடியுள்ளார்.

மணி மொழிப் பெருமானும் தன் பணியைப் பற்றிப் பாடியுள்ளார்.

**நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்**
**பேயேனதுள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனைச்**
**சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்**
**தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ —** கோத்தும்பி 12

அன்னதானம் கொடுப்பவர்கள் வெகு கண்ணியமாயும் பொறுமை யாயும் அன்புள்ளவர்களாய் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். ஏழை, பேதை, பணக்காரன் அந்தஸ்துள்ளவன் என்று பேதம் பாராட்டக் கூடாது, சலுகை செய்யக்கூடாது, உணவிலே கலப்படம் செய்யக் கூடாது, கொட்டிச் சிந்தக்கூடாது, ஏழைகளைத் தண்டிக்கக்கூடாது என என் குருதேவர் சொல்வார். நன்மை செய்யப் போய் பாவப் பாரத்தைக் கட்டிச் சுமக்கக் கூடாது. அன்னதானம் செய்வது சிறப்பாகச் செய்ய வேண்டும்.

எனவே திருப்பணிகளும் கருப்பணியாய் வரக்கூடிய விதத்தில் எவரேனும் தொண்டு செய்யக்கூடாது என்பது அவரின் கருத்து ஆகும்.

அவர் வாழ்வியலில் ஒன்று பசு வளர்த்து பால், தயிர், மோர் என்பவற்றை அடியார்க்குக் கொடுப்பது. ஒரு தினம் வயலுக்குப் போய் வர நேரமாயிற்று. பால் எடுக்கப் பிந்தி எல்லாமே கத்தத் துவங்கிவிட்டன. என்ன செய்தார்? எல்லாவற்றையும் அவிழ்த்து சுதந்திரமாய்ப் போய் மேயுங்களென விட்டுவிட்டார்.

திருவாசக மடத்தைக் கட்டப் பெரிதும் பாடுபட்டுழைத்த சுவாமிகள் கட்டி முடிந்ததும் - அதைத்தான் பாரம் எடுக்கவில்லை. அது அத்திருப்பணி கருப்பணியாக மாறக்கூடாதென்பதற்காக சரவணமுத்துச் சுவாமியிடமே பாரங் கொடுத்தார். தன் அனுபவத்தாற் கண்ட உண்மையைச் சிந்தித்த சுவாமிகள் கூறிய இப்பொன்மொழி நமக்கு நல்வழிகாட்டியாகும். சமுதாயப் பணிமையங்களாய் இயங்க வேண்டிய ஆலயங்கள் சுயநலமிகளின் கூடாரமாக மாற உதவுபவர் களும் கருப்பணியாளரே.

இதை மனதில் உன்னி நாம் பாவப்பிணியை அறுக்க முயல்வோமாக.

'மறுபடியும் கருவடையும் குழியிற்றள்ளி என்னை வருத்தப்படுத்த வேண்டாம்' என்ற கோபால கிருஷ்ணபாரதியின் பாட்டைச் சிந்தித்துச் சிறப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி பாரதி போற்றிப் பாடிய யாழ்ப்பாணத்து சுவாமி இவரே

மகாகவி சுப்பிரமணியப் பாரதியார் பற்றித் தெரியாதவர்கள் வெளியுலகம் பற்றி சிறிதும் தெரியாத மிகச் சில பாமரரே இருக்க முடியும். அந்தளவுக்கு அவரது கவிதைகள் பிரபலமானவை. அவரின் தேசபக்தியும் சமூக அக்கறையும் பெண்கள் மேல் கொண்ட கரிசனமும் அவரது கவிதைகளை விட முன்னிற்கும் வீரியம் படைத்தவை. அவரது கவிதைகளின் தாக்கத்துக்கு உட்பட்டு அதிலிருந்து மீள முடியாமல் அதேயே ஓர் இன்ப அனுபவப் பதிப்பாய் திரும்பத் திரும்ப அசைபோட்டு வாழ்பவர்கள் எத்தனையோ பேர். காலத்தால் அழியாத படைப்புக்கள் அவருடையது.

அத்தகைய மகாகவிக்கு ஞானகுருவாய் இருந்தவர் அருளம்பல சுவாமிகள் ஆவார். இதைக்கூட தன்னை முன்னிருத்தாத மௌனகுருவான ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் எந்த இடத்திலும் சிறு குறிப்பாகக்கூட இதை வெளிப்படுத்தவில்லை.

பாரதியார் தமது பாரதி அறுபத்தாறு எனும் பாடலில் யாழ்ப்பாணத்துச் சாமி என ஒருவரைக் குறிப்பிட்டிருக்கிறார். அது அருளம்பல சுவாமிகளே.

பாரதியின் அந்தப் பாடல் பின்வருமாறு.

**கோவிந்த சாமி புகழ்சிறிது சொன்னே**
**குவலயத்தின் விழி போன்ற யாழ்ப்பாணத்தான்**
**தேவி பதம் மறவாத தீர ஞானி**
**சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்**
**பாவியரைக்கரையேற்றும் ஞானத்தோணி**
**பரமபத வாயில் எனும் பார்வையாளன்**
**காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயும்**
**கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்.**

**தங்கத்தாற் பதுமை செய்தும் இரதலிங்கம்**
**சமைத்துவமற் றினிலீசன் தாளைப் போற்றும்**
**துங்கமுறு பக்தர் பலர் புவிமீதுள்ளார்.**
**தோழரே எந்நாளும் எனக்குப் பார்மேல்**
**மங்களஞ் சேர் திருவிழியால் அருளைப்பெய்யும்**
**வானவர் கோன் யாழ்ப்பாணத் தீசன் தன்னை**
**சங்கரனென் றெப்போதம் முன்னே கொண்டு**
**சரணடைந்தால் அது கண்டீர் சர்வ சித்தி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விட குவளைக்கண்ணன் புகழ் அடுத்து வரும் பாடல்களிலும் யாழ்ப்பாணத்துச் சுவாமி பற்றிய செய்தியைக் காணலாம்.

**மகத்தான முனிவரெல்லாம் கண்ணன் தோழர்**
**வானவரெல்லாம் கண்ணன் அடியாராவார்**
**மிகத்தானுமுயர்ந்த துணிவுடைய நெஞ்சின்**
**வீரர் பிரான் குவளையூர்க் கண்ணன் என்பான்**
**ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்துச்**
**சாமிதனை யிவன்னெறன் மனைத் கொணர்ந்தான்**
**அகத்தினிலே அவன்பாத மலரைப்பூண்டேன்**
**அன்றேயப் போதேவீ டதுவே வீடு.**

பாரதியார் பெரும் புலவர். அவர் சிறப்புக் குறித்து விளக்கிக் கூறவேண்டியதில்லை. அப்புலவர் பெருமான்.

- **குவலயத்தின் விழி போன்ற யாழ்ப்பாணத்தான்**
- **தீர ஞானி**
- **சிதம்பரத்து நடராஜ மூர்த்தி**
- **பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி**
- **பரமபத வாயிலெனும் பார்வையாளன்**
- **மங்களஞ் சேர் திருவிழியால் அருளைப்பெய்யும் வானவர் கோன்**
- **யாழ்ப்பாணத் தீசன் சங்கரனெனப் போதும் முன்னே கொண்டு சரணடைந்தால் அது கண்டீர் சர்வ சித்தி.**
- **ஜகத்தினிலே உவமையிலா யாழ்ப்பாணத்துச் சாமி.**
- **அகத்தினிலே அவன் பாதமலரைப் பூண்டேன் அன்றே யப்போதே வீடதுவே வீடு.**

என்றெல்லாம் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளைப் போற்றிப் புகழ்ந்துள்ளாரென்றால் அந்த சுவாமி யார் என்றறிய நாம் ஆவல் கொள்வது இயல்பே. அந்த யாழ்ப்பாணத்துச் சுவாமி — நம் மௌனகுரு ஸ்ரீ அருளம்பல சுவாமிகளே ஆவார்.

அ.ந.கந்தசாமி என்பவர் ஸ்ரீலங்கா (ஆகஸ்ட் 1961) இதழில் "ஞானம் வளர்ந்த புதுவை" என்னும் தலைப்பில் பாரதி கூறும் யாழ்ப்பாணத்துச் சுவாமி யார் எனும் வினாவை முதன் முதலாக எழுப்பியிருந்தார். அவர் தனது கட்டுரையில் யாழ்ப்பாணத்து சுவாமிகள் யார் என்பதை ஆராய வேண்டும் எனக் குறிப்பிட்டாரே தவிர, எவரையும் யாழ்ப்பாணத்து சுவாமியாக இனங்காண முற்படவில்லை.

யாழ்ப்பாணத்து சுவாமிகள் யார் எனும் கேள்விகள் எழுந்ததன் பின்னர் அரும்ளம்பல சுவாமிகளின் அன்பரான காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை அவர்கள் "பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்து சுவாமி" எனும் தலைப்பில் ஒரு கட்டுரையை (ஏப்ரல் 1962) வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கருத்தினை 1939 ஆம் ஆண்டு மார்கழி மாதம் தாம் முதன் முதலாக சுவாமியைத் தரிசனம் செய்ய நாகபட்டினம் சென்ற போது தமக்கு ஏற்பட்ட அனுபவ அடிப்படையில் அதைக்கூறினார். அங்கு ரயில் நிலையத்திலிருந்து வெளியே வந்து ஒரு வண்டிக்காரரை அழைத்து, "அரும்ளம்பல சுவாமியாருடைய இடத்திற்குக் கொண்டு போய் விடு" எனக் கூறிய போது, அதற்கு மறுமொழியாக அவர் "அப்படியொரு பெயரில் இந்த ஊரில் யாரும் இல்லையே" எனக் கூறியவாறே சொற்ப நேரத்தில் "மௌனகுரு சாமியா? யாழ்ப்பாணத்து சுவாமியா?" எனக் கேட்டதாகவும் பின் அந்த வண்டிக்காரர் அருளம்பல சுவாமிகளின் இருப்பிடத்துக்குக் கொண்டு சென்று விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த நிகழ்ச்சியைப் பார்க்கின்ற போது யாழ்ப்பாணத்து வியாபாரி மூலையைச் சேர்ந்த அருளம்பல சுவாமிகளையே நாக பட்டினத்து மக்கள் 'யாழ்ப்பாணத்து சுவாமிகள்' என அழைத்தனர் என்பது புலனாகிறது.

1960 இல் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குச் சென்றிருந்த சி.மு.தம்பிராசா அவர்கள் அங்கு "பொந்துக்குள் சுவாமி" எனப்பட்ட சுவாமியைச் சந்தித்த போது பெற்ற செய்திகளும் பாரதியால் சுட்டப்பட்ட யாழ்ப்பாணத்து சுவாமி அருளம்பல சுவாமிகளே என்பதனை வெளிப்படுத்துகிறது.

எட்டய புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பொந்துக்குள் சுவாமியை மேற்குறிப்பிட்ட அன்பர் சந்தித்த போது சுவாமிகளின் அந்த அன்பரின் ஊரைக் கேட்டார். அதற்கு அவர் மறுமொழியாக பருத்தித்துறை எனக்கூறிய போது, "பருத்தித்துறை தானே. யாழ்ப்பாணத்து சுவாமியின் ஊர். அவர் பாரதியின் குருவாக இருந்தவர் தங்கம் போன்ற சுவாமி" எனக் குறிப்பிட்டார் என்பதனை அறிய முடிகிறது.

அருளம்பல சுவாமிகளை பாரதியால் புகழப்பட்ட யாழ்ப்பாணத்து சுவாமி எனக் கொண்டு 07.05.1963 இல் இலங்கை முற்போக்கு சங்கத்தினர் ஒரு விழாவினை வியாபாரி மூலைப் பகுதியில் எடுத்தனர். சங்கத்தினர் இவ் விழாவில் அருளம்பல சுவாமிகளின் ஜீவ சமாதிக்கருகில் "பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச் சுவாமியார் நினைவாக இலங்கை முற்போக்கு சங்கத்தினர் நிறுவியது" எனும் வாசகம் பொறித்த நடுகல் ஒன்றை நாட்டினர். இவ்விழாவை முன்னிட்டு அன்றைய தினகரன் பத்திரிகையில் யாழ்ப்பாணத்துச் சுவாமியார் நினைவிதழ் ஒன்றும் வெளியானது.

அருளம்பல சுவாமிகளே பாரதியாரின் ஞானகுருவான யாழ்ப்பாணத்து சுவாமியார் என்பதை 'ஈழநாடு' பத்திரிகை ஆசிரியர் தாம் 09.05.1963 இல் யாழ்ப்பாணத்து சுவாமியார் என்னும் தலைப்பில் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் ஏற்றியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.05.1963 இல் வெளியான ஆத்மஜோதி இதழின் அட்டையில் அருளம்பல சுவாமிகளின் படம் பிரசுரிக்கப்பட்டு, பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்து சுவாமி என வெளிவந்தது. அதில் ஆத்மஜோதி இதழின் ஆசிரியர் இராமச்சந்திரன் அவர்கள் இந்த அத்தியாயத்தின் அடிநாதமான மௌனகுரு அருளம்பல சுவாமிகளே பாரதியாரின் ஞானகுருவான யாழ்ப்பாணத்து சுவாமியார் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

சி.மு.தம்பிராசா அவர்கள் மேற்குறிப்பிட்ட கருத்தை சிறிதும் மறுக்காது 22.11.1981 இல் வீரகேசரியில் குரு பூசையை முன்னிட்டு ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்.

சுடர்மிகு அறிவுடன் படைத்து விட்டாய் என அன்னை பராசக்தியை நோக்கி பாடல் பாடும் பாரதியின் ஞானகுரு அருளம்பல சுவாமிகள் என்றால், அந்த அருளம்பல சுவாமிகளுக்கு ஞானத்தைப் போதித்தவள் நாகபட்டினத்தில் நீலாயதாட்சி என்ற பெயரில் அருள்பாலிக்கும் அன்னை பராசக்தி என்பது குறிப்பிடத்தக்கது. இதிலும் ஏதோ ஒரு மெல்லிய புனிதச் சங்கிலித் தொடர் இழையோடுவதை உணரமுடியும்.

பாரதி யாழ்ப்பாணத்துச் சுவாமியை தேவி பதம் மறவாத தீர ஞானி என வர்ணித்துள்ளார். அருளம்பல சுவாமிகள் தமது ஞான குருவாக நாகை நீலலோசனி அம்மனைக் கொண்டிருந்தமை நாம் அறிந்ததே. அருளம்பல சுவாமிகள் தமது பாடல்களில்,

"குருவாக நின்ற கொடியே"

"குருவான நாகையில் கொடியாக எழுகின்ற குமரியே நீலாயதாட்சியே"

"குரு மூர்த்தி நாகை நீலாச்சியே"

எனப் பலவாறாக சுட்டுகின்றமை நாகை நீலாயதாட்சியை அவர் குருவாகக் கொண்டு வாழ்ந்தமைக்குச் சான்று பகர்கின்றது.

நிஷ்டை கற்கச் சிதம்பரம் நாடி வந்த சுவாமிகள் தம்மை தேவி நீலாச்சி அங்கு செல்ல வேண்டாம் எனத் தடுத்து தானே நிஷ்டை கற்பிக்க வந்தமையும் நாகை நீலலோசனி அம்மன் பேரில் பாடிய தோத்திரப் பாடல் அறிவிப்பில் வெளிப்படுத்துகின்றார்.

"............. நீ

**பழக்கிடும் ஞான நிடையதை நான் படித்திலேன்**
**பரனேயன் நிஷ்டை செய்து**
**பலருக்கும் பேரின்ப நிலைகாட்டப் பணிக்குவாய்**
**பார் பூத்த பரையினாளே"**

- என நீலாச்சியிடமே வேண்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான நிஷ்டையைக் கற்று அதில் தேர்ச்சி அடைந்த போது பரிசோதிக்க வேண்டிய காலம் ஏற்பட்டதை அறிந்த சுவாமிகள்,

"சர்வ வல்லமையுள்ள பலசாலியாகிய பரமபதியே நிலைகொண்டு நில்லாது ஆடி அலைந்ததோடு விழத்தில்லைக்காளி எதிர்காண நடை பெற்றிருக்கும் போது சர்வ மூடனாகிய ஏழையேன் அவ்வளவு காரியம் செய்து காட்டி நிற்க முடியாது. இன்னும் பராபரமே அப்படிப்பைப் படித்துச் செய்ய அவரிடத்திறறானோ நியமித்து அவரையே தாங்கள் பரிசோதிக்க வேணும்" என அழகிய கற்பனை வளத்தோடு நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம் செய்தமையும் காணலாம்.

தேவி பதம் மறவாது அவர் கொண்ட காதல் நீலலோசனி அம்மை ஊஞ்சல் தாலாட்டுத்தோத்திரம் என வெளிவந்தன. இவற்றை விட சுவாமிகளின் அச்சிலேறாத புலம்பல்கள் எனும் ஆக்கமும் அன்னையை நோக்கியே பாடுவதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் குருவான நீலாச்சியே தமக்கு உணவளிப்பதாகக் கூறும் சுவாமிகள் சில வேளைகளில் நீலாச்சி செய்கின்ற திருவிளையாடல்களைக் கூறுகின்றார்.

**"பலகாரம் படைப்பதென பரிந்தபடி முகமன் செய்தால்**
**சிலநேரம் பொறுத்துண்ணச் சென்ற போது மறைந்து விட்டால்**
**கலமாக வவளின் செயல் கண்டாயோ வம்மானே**
**நலமாக நஞ்சுசர்ப்பம் நகையாக அணிந்தவனே"**

எனும் பாடல் மூலம் தேவி உணவுண்ண அழைத்துவிட்டு உணவை ஒளித்து வைத்து வேடிக்கை செய்தமையை முறையிடுகின்றமையைக் காணலாம். இவ்வகையில் தேவி பதம் மறவாத தீர ஞானி எனும் மகாகவி பாரதியாரின் கூற்றுக்கு அருளம்பல சுவாமிகள் குறைவரப் பொருந்துவார் என்பது தெளிவு.

யாழ்ப்பாணத்துச் சுவாமி புகழ் கூற வந்த பாரதி அவரைச் சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாகவும் சங்கரனாகவும் காண்கிறார். மானிட நிலை கடந்த தெய்வ நிலைக்குரியவராக யாழ்ப்பாணத்து சுவாமியைக் காண்கின்ற வகையிலேயே ஜகத்திலோர் உவமையிலா யாழ்ப்பாணத்துச் சுவாமி எனக் குறிப்பிட்டார் என்பதை உணரலாம்.

இந்த உலகத்திலுள்ள எந்தவொரு பொருளையும் உவமையாகக் கொண்டு கூற முடியாத அளவுக்கு உயர்ந்தவராக சுவாமிகள் விளங்கியது கண்கூடு. ஒவ்வொரு சுவாமிகளும் தங்களின் ஞான வாழ்வுக்குப் பெரும்பாலும் ஒரு குருவின் துணை கொண்டே ஆன்மீக முதிர்ச்சியும் உயர்ச்சியும் பெற்றுள்ளனர். ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்ப இறைவன் மானிட வடிவில் குருவாய் வந்து ஆட்கொள்ளுவான் என்பது நிரந்தர வாழ்க்கைமுறைத் தத்துவமாய் அறியப்படும் இந்து மார்க்கம் எடுத்தாளும் போதனையாகும். இவ்வாறே பாரதத்திலும் ஈழத்திலும் வாழ்ந்த சுவாமிகள் பலரை நோக்கும் போது இவ்வாறாக சற்குரு வாய்த்திருப்பது காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அருளம்பல சுவாமிகளின் வாழ்வை உற்று நோக்குவோமாயின் இவருக்கு வாய்த்த குரு இதர சுவாமிகளுக்கு வாய்த்த குரு நாகை நீலலோசனி அம்மனாக இருப்பது குறிப்பிடத்தக்கதொன்றே. சைவ நாயன்மார்கள் சிலரது வாழ்வில் இறைவனே நேரில் வந்து அருள் புரிந்தது போல் அருளம்பல சுவாமிக்கு, வாழ்வில் அம்மனே ஞான குருவாக வாய்த்தமை சுவாமிகளின் உயர்ந்த தன்மைக்குச் சான்றாகும்.

**"காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயும்**
**கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்"**

எனப் பாரதியார் குறிப்பிடுவதும் அருளம்பல சுவாமிகளுக்குப் பொருந்தும். சுவாமிகள் புதுவையிலே ஒரு குறிப்பிட்ட காலம் வாழ்ந்தவர் என்பதும் அறிந்ததே. மேலும் சுவாமிகள் வெளியிட்ட பல நூல்கள் புதுவையிலே அச்சிடப்பட்டவையே. மேலும் சுவாமிகளுடன் மிக நெருங்கிய புனிதத்தொடர்பு கொண்ட அன்பர்கள் பலர் இருந்தனர் என்பது சுவாமிகளின் கடிதங்கள் வாயிலாக அறியலாம்.

பாரதியார் 1908 முதல் 1918 வரையிலான 10 ஆண்டு காலப்பகுதியைப் புதுவையில் கழித்தார். 1908 ஆம் ஆண்டில் இந்தியா என்னும் வாரப்பத்திரிகை மீது அன்றைய ஆங்கில அரசின் பார்வை திரும்பியதும், இந்தியாவின் சட்டபூர்வ ஆசிரியர் கைதானதும் பாரதியார் மீது வாரண்டு பிறப்பிக்கப்பட்டிருந்ததும் பாரதியின் புதுவை வாசத்திற்கு காரணங்கள் ஆயிற்று. இந்தப் 10 ஆண்டுகளில் பிற்கூற்றுப் பகுதியிலேயே அருளம்பல சுவாமிகள் புதுவை சென்றுள்ளார். குறிப்பாக 1914 ஆம் ஆண்டு நாக பட்டினத்தில் நிஷ்டை முடிந்து எழுந்த பின்னரேயே அருளம்பல சுவாமிகள் புதுவை சென்றிருத்தல் வேண்டும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடு ஏதும் இருக்கமுடியாது. பாரதி 66 எனும் நூல் பிறந்ததும் 1916 ஆம் ஆண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இரசலிங்கம் சமைத்தும் அவற்றினில் ஈசன் தாளைப்போற்றும் பக்தர் பலர் புவி மீது உள்ளார் எனக் குறிப்பிடுகிறார் பாரதி. மாங்கொட்டைச்சாமி, யாழ்ப்பாணத்துச் சுவாமி போன்ற சித்தர் பெருமக்கள் பலரைச் சந்தித்து அவர்களது கருணைக்கடாட்சம் பெற்று இரசமணி மகிமைகள் உள்ளிட்ட சிலவற்றை கற்றதாக அறியமுடிகிறது. அதனால்தான் இரசலிங்கம் பற்றியும் வாசியை கும்பகத்தால் வலியக்கட்டி சுவர் போல வாழ்தல் வேண்டும் என அவரால் பிறருக்கு உபதேசம் செய்யவும் முடிந்தது. இப்படிக் குறிப்பிடுவது இரச வாதம் குறித்தும் அது குறித்த பல விளக்கங்கள் குறித்தும் சுமார் 40 வருடங்களுக்கு முன் வெளிவந்த ஓர் அரிதாய்க் கிடைத்த நூல் ஒன்று தெரிவிக்கிறது.

இவற்றையெல்லாம் கொண்டு அருளம்பல சுவாமிகளே பாரதியாரின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சுவாமியார் என மிக உறுதியாகத் தெளிவு கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டுமல்ல இன்னும் கூட சில ஆதாரங்கள் உள்ளன......... என்றாலும் பாரதியின் புலமைத்திறனைக் காட்டி மட்டுமே அருளம்பல சுவாமிகளின் ஞான வழிக்கு புகழ்மாலை சேர்க்க விரும்பவில்லை. இது போன்று எத்தனை மாந்தர்கள் வாழ்வில் அவர்களை அறியாமலேயே எத்தனை தீபம் ஏற்றி வைத்தாரோ எல்லாம் அந்தப் பரப்பிரம்ம சிஸ்வரூபிக்கே தெரியும்.

பாரதியின் ஞான குரு- அருளம்பல சுவாமிகள் என்ற தகவலைக்கூட ஜீரணிக்கும் பக்குவம் இல்லாதவர்களாய் யாழ்ப்பாணம் வாழ் அறிவு ஜீவிகள் சிலர் பாரதிக்கு இழுக்குத் தேடிவிட்டதாய் கருத்து மோதல்களில் ஈடுபட்டார்கள். தமக்குள்ள லௌகீக வாழ்க்கையின் தற்காலிக வெற்றிகளுக்கான சிற்றறிவைக் கொண்ட அவர்கள் கற்பனைக்கெட்டாத பிரமாண்டமான பெரும் சக்தி குறித்த விமர்சனங்களை வெளியிடும் போது நம்மால் வெறுமனே சிரித்து வைக்கத்தான் முடிகிறது.

ஆயினும் பலவிதமான ஆதாரங்கள் யாழ்ப்பாணத்துச் சுவாமி என்று அழைக்கப்படும் அருளம்பல சுவாமிகளின் புனிதத் தொடர்பு குரு சிஷ்ய வகையில் ஏற்பட்ட பின்னே பாரதியின் புலமை சீரிய வழியில் புயலென சத்திய வழியில் வீரியமாய் வெளிப்பட்டது என்பதனை நிரூபணம் செய்கின்றன.

எந்த ஒரு பரப்பிரம்ம ஸ்வரூபிகளும் எவ்விடத்திலும் தன்னை முன்னிருத்திக் கொண்டதில்லை. அவர்களுக்கு இறைவனின் திருவடியே முக்கியம். சிவன் என்ற வார்த்தையைக் கூட அவர்கள் இறைவன் என்ற வார்த்தைக்கு மாற்று வார்த்தை என்ற தொனியில்தான் குறிப்பிட்டுச் சென்றிருக்கின்றனர். அதைக்கூட அவர்கள் பாடலின் இலக்கணத்துக்குட் பட்டெல்லாம் சொல்லவில்லை. அவர்களுக்கு மொழியுணர்வு உள்ளிட்ட எல்லாவற்றையும் விட இறை உணர்வே முக்கியமாய்ப்பட்டிருக்க வேண்டும்.

இறைவனது எல்லையில்லாத கருணையுள்ளம் தனி மனிதனிடத்தோ அல்லது சமுதாய நிலையிலோ எந்தவொரு துறையிலும் தர்மவழிப் பாதைகளை வலிமை செய்ய ஏதோவொரு மனிதனைத்தான் முன்னிருத்துகிறார்கள். மகான்களின் ஸ்பரிசம் பட்டபின் அவர்கள் நல்ல கலைஞன் ஆகவோ அறிவாளியாகவோ பேச்சாளனாகவோ எழுத்தாளனாகவோ நிபுணத்துவம் மிகுந்தவனாகவோ முன்னைவிட பலமடங்கு வீரியம் பெற்று சிலிர்த்தெழுகிறார்கள்.

அதுபோல சாகாவரம் பெற்ற பாடல்களை எழுதிய மகாகவி பாரதியாருக்கும் அருளம்பல சுவாமிகளின் புனிதத்தொடர்பு கிட்டிய பின்னே முன்னைவிட பலமடங்கு வீரியமாய் கிளம்பினார் என்பது தெளிவான உண்மையாகும்.

**குருவே சரணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிவிடை புரியும் பாக்கியம்

பருத்தித்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையே டிங்கிகள் எனப்படும் வணிகக் கப்பல்களை வாங்கி அதன் மூலம் வாணிபம் நடத்தி பொருள் தேடிய செல்வந்தர் திரு.வெ.க.சிவப்பிரகாசம்பிள்ளை அவர்கள். அவரது ஆன்மீக நாட்டத்துக்கு சான்று பகர்வதாய் அமைந்திருப்பது வியாபாரி மூலை ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் ஆகும். அவர் சுவாமி மீது வைத்திருந்த குரு பக்தி அளவிடற்கரியது.

1930 ஆம் ஆண்டளவில் திரு.வே.க.சிவப்பிரகாசம்பிள்ளை அவர்கள் நாகபட்டினம், அக்கரைக்குளம் ரோட்டில் ஒரு மடம் அமைத்து அங்கு சுவாமியைத் தங்க வைத்திருக்கிறார். 1924 முதல் - 1941 வரையான காலப்பகுதியில் சுவாமியின் 14 நூல்கள் புதுவையிலும் நாகபட்டினத்திலும் வாழ்ந்த அவர்களது அடியார்களினால் அச்சில் பதித்து வெளியிடப்பட்டன.

சிவப்பிரகாசம்பிள்ளை அவர்கள் மட்டுமல்லாது சுவாமியின் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நபர்கள் பல்வேறு விதமாக அவர்களுக்கு பணிவிடை புரியும் பாக்கியம் பெற்றிருந்திருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

நிஷ்டை முடிந்து வேதாரணியம் அகத்தியாம்பள்ளி, மாயவரம், காரைக்குடி போன்ற இடங்களில் நடமாடிய வேளையில் வேதாரணியம் அ.விஸ்வலிங்கம்பிள்ளை, மு.மாரிமுத்தாபிள்ளை என்பவர்களும் நெல்லித்தோப்பு, புதுச்சேரியைச் சேர்ந்த அ.மரியநாதன் நாயகர் என்பவரும் சுவாமியின் நெருங்கிய தொண்டர்களாக விளங்கியிருக் கின்றனர்.

நாகபட்டினம் சென்று சுவாமியின் மகிமை கண்டு ஆசிபெற்று வந்தவரான திரு.ச.கணபதிப்பிள்ளை எனப்படும் வேற்சாமியார் தம் அன்பின் நிமித்தம் சமாதி ஆலயம் உருவான காலம் முதல் அதன் நித்திய பூசையைப் பொறுப்பேற்று நீண்டகாலம் அப்பணியைச் செய்து வந்தார். நூற்றாண்டு காலம் வாழ்ந்த அவர் தாம் வயோதிபக் காலம் அடைந்த பின் தம் மக்களான க.சிவலிங்கம், க.உத்திரன் ஆகியோரிடம் ஒப்படைத்தார். வடமராட்சியால் மக்கள் இடம் பெயரும் காலம் வரை தந்தையின் பணியை மக்களும் தொடர்ந்தனர்.

பிறர் வாயிலாக அருளம்பல சுவாமியின் மகிமையை கேள்வியுற்று அவரால் கவரப்பட்டு 'ஓம் அருளம்பல நமஹ எனும் திருநாமத்தை ஓதியவாறு தம் வாழ்வை முழுதாக அவர் பணிக்கே அர்ப்பணித்தவர் திரு.பொ.சபாபதிப்பிள்ளை அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் குருமூர்த்தி சர்வலோக நாயகராகிய எந்தை பெருமான் ஈசன்" என அவரை எப்போதும் போற்றி வழிபட்டமையால் 1931 ஆம் ஆண்டில் தம் குல தெய்வமான புற்றளை பிள்ளையார் ஆலயத்தில் அருளம்பல சுவாமியின் தரிசனத்தை நேரில் கண்டது போலக் கண்டு உரையாடும் பேறு பெற்றார். சுவாமிகள் தம்மைக் குறித்துப் பாடுமாறு வேண்ட "நான் அறிவில்லா மூடன் எனக்குப் பாடத்தெரியாதே" என அடக்கத்துடன் மறுதலித்த போதே சுவாமியே அடியெடுத்துக் கொடுத்து பாடவைத்தார். குருவின் கருணையை வியந்து அந்த இடத்திலேயே கசிந்துருகிப் பாடலானார்.

**"என் பெருந்தேவே ஓலம் ஏகமே வல்லாயோலம்**
**தன்னிகரில்லா யோலம் தவத்தினிக் கனியாயோலம்**
**வன்பிறப்பறுப்பாய் ஓலம் வரமெல்லாம் அளிப்பாயோலம்**
**அன்பருக்கெளியா யோலம் அருளனே ஓலம் ஓலம்"**

எனப் பாடி மகிழ்ந்தவர் சுவாமி மீது பல பாடல்களைப் பாடி வெளியிட்டுள்ளார்கள்.

இவர் சுவாமியின் பெருமையை மற்றவரும் அறிய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு 1962 இல் பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சுவாமி என்னும் கட்டுரையை ஸ்ரீ லங்கா இதழிலும், 1979 இல் சுவாமியின் வரலாற்றை புற்றளைக்கரசே என்ற நூலாகவும் வெளியிட்டார்கள்.

1979 ஆம் ஆண்டுகளில் ஜீவாலயத்துக்கு வருகை தந்த மெய்கண்டார் ஆதீன முதல்வர் ஸ்ரீமத் ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகளும் சோலைகள் சூழ்ந்த இவ்விடத்தின் அமைதியால் கவரப்பட்டு ஆன்மீக சாதனைகளையும் பஜனைகளையும் வேதாந்த வகுப்புக்களையும் தம் இறுதிக்காலம் வரை இங்கு நடத்தி வந்தார்கள்.

1991 ஆம் ஆண்டில் உருவான யாழ்ப்பாணத்து சுவாமிகள் சபை சுவாமியின் வரலாற்று ஆய்வு ஆக்கங்கள் என்பனவற்றில் கவனம் செலுத்தி அவற்றினைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது. இப்பணிகளில் பேராசிரியர் நா.ஞானகுமாரன் அவர்களும் வைத்தியக் கலாநிதி மு.க.முருகானந்தனும் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டு நிலைமைகளால் (இலங்கையின் சமூக அரசியலின் மாறுபட்ட நிலைகளால்) ஊரவர் பலரும் ஊரைவிட்டு இடம்பெயர்ந்த வேளை முதல் சுவாமிகளிடம் இருந்து தமக்குக் கிடைத்த கனவுக்குறிப்பு ஒன்றின் பிரகாரம் ஜீவாலய பூஜையைப் பொறுப்பேற்று பக்தி சிரத்தையுடன் செய்து வந்தவர் அன்பர் சி.மு.தம்பிராசா அவர்கள். ஜீவாலயப் புனருத்தாரணப் பணிக்காக வீரபத்திரர் ஆலய திருப்பணிச் சபையால் ஆலயம் பொறுப் பேற்கப்படும் வரை அப்பணியைத் தொடர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரவர் உறவினர் எனும் வகையில் சுவாமியிடம் ஈடுபாடு கொண்டோர் ஏராளம். சுவாமி தம் கைப்படச் செய்த கைப்பை, மர அகப்பை, கைத்தடி போன்ற பொருட்களை பொன்போல் பேணிக் காத்தவர் சுவாமியின் தாய்வழி உறவினர் பலரும் தம் பிள்ளைகளுக்கு சுவாமியின் நினைவாக அருளம்பலம் எனப் பெயர்சூட்டி உள்ளனர்.

சுவாமியின் மெய்யடியாரான சஜ. நா. சொக்கநாதம்பிள்ளை அவர்கள் அரிதான சுவாமியின் வெளியீடுகளை பேணிக்காத்து வந்ததுடன் சிவஞானப்பிரகாச சபையினூடாக சுவாமி பற்றி பிரசுரங்களை வெளியிட்டு வந்தார். 1981 இல் சுவாமியின் நூற்றாண்டு விழாவையும் சிறப்பாக நடத்தினார்.

இதுவரை கண்டது கடந்தகாலத்தில் குரு பணியில் ஈடுபட்டவர்கள் குறித்த சிறு விபரங்கள். இனி தற்சமயம் குரு பணியில் உள்ளவர்கள் குறித்து காண்போம்.

லண்டனில் டாக்டராக இருக்கும் திரு. சதானந்தன் அவர்கள் சிறுவயதுக் காலம் தொட்டே ஜீவாலயத்துக்குச் சென்று தவறாது தொடர்ந்து வழிபட்டு வருகிறார். இவர் சுவாமியின் மிக நெருங்கிய சீடராக இருந்த சிவப்பிரகாசபிள்ளையின் மறுபிறப்பு என சுவாமியுடன் நெருங்கிய தொடர்புடையவர்களால் கூறப்படுகிறது. இவர் இன்றும் அருளம்பல சுவாமிகளின் மீது அளவிடற்கரிய குரு பக்தி கொண்டு வாழ்ந்து வருவதைப் பார்க்கும் தருணத்தில் போன ஜென்மத்தில் சுவாமிக்கு மிக நெருங்கிய தொடர்பு உடையவராய் இருந்து தொண்டு செய்ததன் தொடர்ச்சியே இந்தக் குரு விசுவாசம் எனத் தெரிகிறது.

திரு. சதானந்தம் டாக்டருடன் அவர் குடும்பத்தினர் அனைவரும் முழு ஒத்துழைப்புடன் இத்திருப்பணியைச் செய்ய முன்வந்தது அவர்கள் செய்த பெரும்பாக்கியம். டாக்டரின் சிற்றன்னையான கனகம்மாள் அவர்கள் சுவாமியின் ஜீவாலயத்திற்கு அருகாமையிலுள்ள பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றி பல பொதுநலக்காரியங்களைச் செய்து வந்ததாகத் தெரியவருகின்றது. இவர்களின் இல்லம் தற்சமயம் மகள் ஜெயதேவி அவர்களால் சுவாமியின் பக்தர்கள் வந்து தங்கும் விடுதியாக அமைக்கப்பட்டுள்ளது.

அடியார் சபாபதிப்பிள்ளை அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களான முத்துக்கிருஷ்ணர் குடும்பத்தினர் சுவாமியின் ஆலயப் பணியில் ஈடுபட்டு தற்போது இடம்பெறும் ஜீவாலயப் புனர் நிர்மாணத்தையும் கும்பாபிஷேகத்தையும் நடத்த முன்வந்து அதற்கான ஓர் அறக்கட்டளையை உருவாக்கி சுவாமியின் கருணையால் செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துகிருஷ்ணர் குடும்பத்தினரின் வேண்டுதலை ஏற்று சபாபதிப்பிள்ளை அவர்களின் மருமகன் திரு. சா. நவரத்தினராசா அவர்கள் ஜீவாலய புனர்நிர்மாணப் பணிகளை கடும் உழைப்பைக் கொட்டி உருவாக்கியுள்ளது பாராட்டத்தக்கதும் குருவின் கருணை கிடைக்கச் செய்வதுமான பணியாகும். இவருடன் வீரபத்திரர் ஆலயத் திருப்பணிச் சபையைச் சேர்ந்த திருவாளர்கள் சி.பாலசுந்தரம், பொ. தெய்வசிகாமணி, சி. நித்தியானந்தன், திரு. பொன்னம்பலம் ஆகியோருடனிருந்து உழைத்திருப்பதும் பாராட்டத்தக்க குருப்பணியாகும்.

தமது ஆதனங்கள் சிலவற்றின் வருமானங்கள் மூலம் ஜீவாலய நித்திய காரியங்கள் இடம்பெற ஆதரவளித்து வந்த ஆலய தர்மகர்த்தா வெ. கா. சி. பாலசுப்பிரமணியம் குடும்பத்தினரும் தமது பங்களிப்பினைச் சிறப்பாகச் செய்திருக்கின்றனர்.

இப்படி சுவாமியின் ஜீவாலயம் புகும் முன்னும் புகுந்த பின்னுமாய் கணக்கிலடங்காத அன்பர்கள் அவருக்கான குரு பணியைச் செய்யும் பெரும் பாக்கியம் பெற்றிருந்தனர்.

சுவாமிகளைப் பற்றி முழுமையான வரலாறு எழுத முடியாது என்ற நிதர்சனம் அறிந்தும் சில வெளிச்சப் பொட்டுக்களை மட்டுமாவது புத்தக வடிவில் வெளியிட யாம் முயன்றபோது எழுத்தாக்கத்திற்கு துணை நின்ற கோயம்புத்தூர் வேதமாலிகாஜோதிஷ ஆய்வாலயம் சன்பிரிண்டாலயாவும் மௌனகுரு அருளம்பல சுவாமிக்கு இப்படி மிகச் சிறு அளவிலாவது பங்குகொள்ள வாய்ப்புக் கிடைத்தது எம் பெரும் பாக்கியம் எனக் குறிப்பிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்படி சிறு அளவிலிருந்து வாழ்க்கையையே குருப் பணிக்கு அர்ப்பணிக்கும் மிகப்பெரும் அளவு வரையில் அவரது திருவடிக்குப் பணிபுரியும் பாக்கியம் பெறுவது எளிதான ஒன்றல்ல. எல்லோருக்கும் மிக எளிதாகக் கிட்டுவதுமல்ல. அதற்கு மகத்தான புண்ணியங்கள் செய்திருக்க வேண்டும். செய்தவர்களும் செய்பவர்களும் செய்யப்போகும் நபர்களும் கொடுத்து வைத்த பாக்கியவான்கள்.

குருவே சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனுக்கு மூன்று தவம்.

மனிதன் சரீர தவம், வாக்கு தவம், மானஸீக தவம் என மூன்று தவங்களை மேற்கொள்ள வேண்டும்.

பூசை செய்வது ஆலயம் தொழுவது மாதா பிதாவையும் பெரியோர்களையும் நமஸ்காரம் செய்வது சரீர தவம்.

எல்லோரிடத்திலும் அன்புடன் பேசுவது பிறர் மனம் நோகாமல் பேசுவது வேத சாஸ்திர இதிகாஸ புராணங்களைப் படிப்பது. முதலானவை வாக்கு தவம்.

மௌனமாக இருப்பது மனதை சுத்தமாக வைத்துக் கொள்வது தீய சிந்தனைகள் இல்லாமல் இருப்பது தியானம் செய்வது இவைகளெல்லாம் மானஸீக தவம்.

-(நன்றி-ஆலயம்)-

---

| | |
|---|---|
| 01.05.2006 | சதுர்த்தி விரதம் |
| 03.05.2006 | ஷஷ்டி விரதம் |
| 05.05.2006 | அட்டமி |
| 07.05.2006 | அக்கினி நாளாரம்பம் |
| 09.05.2006 | ஏகாதசி விரதம் |
| 10.05.2006 | பிரதோஷ விரதம் |
| 11.05.2006 | சித்திரைச் சித்திரை |
| 12.05.2006 | சித்திரா பூரணை விரதம் |
| 12.05.2006 | ஊரெழு கிளானைப்பதி ஸ்ரீ பர்வத பத்தினி அம்பாள் ஸ்ரீ சக்கரபூஜை |
| 16.05.2006 | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 20.05.2006 | அட்டமி |
| 23.05.2006 | ஏகாதசி விரதம் |
| 24.05.2006 | பிரதோஷ விரதம் |
| 25.05.2006 | ஆத்மஜோதி முத்தையா அவர்களின் ஜெனன தினம் |
| 26.05.2006 | அமாவாசை விரதம், கார்த்திகை விரதம் |
| 28.05.2006 | அக்கினி நாள் முடிவு |
| 30.05.2006 | சதுர்த்தி விரதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

**காப்பு**

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.**

ஆத்திசூடி – திருவாத்திப்பூமாலையை அணிந்த சிவபெருமான்; அமர்ந்த தேவனை – விரும்பிய பிள்ளையாகிய விநாயகக் கடவுளை; ஏத்தி ஏத்தி – துதித்துத் துதித்து; யாம் தொழுவோம் – நாங்கள் வணங்குவோமாக.

1. **அறஞ் செய விரும்பு:**
அறம் – தருமத்தை; செய – செய்ய; விரும்பு – விரும்புவாயாக

2. **ஆறுவது சினம்**
ஆறுவது – ஆற்றிக்கொள்ள வேண்டியது; சினம் – கோபமேயாகும் (கோபத்தை அடக்கு)

3. **இயல்வது கரவேல்**
இயல்வது – உன்னால் உதவக்கூடிய தொன்றை; கரவேல் – உதவாது ஒளிக்காதே.

4. **ஈவது விலக்கேல்**
ஈவது – பிறர் கொடுப்பதை; விலக்கேல் – தடுக்க முயலாதே.

5. **உடையது விளம்பேல்**
உடையது – மறைக்கவேண்டியுள்ள இரகசியத்தை; விளம்பேல் – பிறரிடம் சொல்லாதே.

6. **ஊக்கமது கைவிடேல்**
ஊக்கமது – விடாமுயற்சியை; கைவிடேல் – கைவிட்டு விடாதே.

7. **எண் எழுத்து இகழேல்**
எண் எழுத்து – கணித, இலக்கண இலக்கிய நூல்களை; இகழேல் – கற்பதற்குப் பின் நிற்காதே.

தொடரும்............

## ஆத்மஜோதி ஜெயந்தி விழா

**25.05.2006 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஏழாலை இலந்தைகட்டி பாதாள ஞானவைரவர் கோவிலில் விசேட பூசையும் தொடர்ந்து ஆத்மஜோதி தியான மண்டபத்தில் 88வது ஜெயந்தி விழாவும் கொண்டாடப்படும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தா நேயர்களுக்கு......

*அன்புடையீர்,*

இறைவன் திருவருளினாலும் மகான்களில் நல்லாசியினாலும் பக்தர்களின் நல்லெண்ணத்தினாலும் ஆத்மஜோதி 13வது இதழ் வெளிவந்துள்ளதை அறியத் தருகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரிய காலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகத் தொண்டு பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்

**ஆத்மஜோதி தியான மணிமண்டபம்**
**ஏழாலை**

தொடர்பு:-
**நா. முருகையா**
**ஊரெழு கிழக்கு**
**சுன்னாகம்.**

***என்றென்றும் உங்கள் ஆதரவு கிடைப்பதாக***

## ஆத்மஜோதி ஆயுள் சந்தா வழங்கியவர்கள்

- **S.K. செல்லையா** - *இல.20, டாம் வீதி, கொழும்பு.*
- **E.S.P. நாகரத்தினம்** - *இல.50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
- **லிங்கம் கூம்பார்** - *கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
- **மோகன் வர்த்தக நிலையம்** - *இல.02, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.*
- **S.குமணன்** - *231, ஆட்டுப்பட்டித்தெரு கொழும்பு -12*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி முத்தையா அவர்களின் வெளியீடுகள்

- ஆத்மஜோதி
- ஏழாலை
- ஈழத்துச் சித்தர்கள்
- முப்பெரும் சித்தர்கள்
- நவராத்திரிப் பாமாலை
- கேதாரபத்திரி யாத்திரை
- இந்தோனேசியாவில் 2 வருடம்
- திருமுறைக் கதைகள்
- அர்ச்சனை மாலை ஆத்மஜோதி மண்டப வெளியீடுகள்
- பிள்ளையார் பெருங்கதை
- சிறுவர்களுக்கேற்ற பிள்ளையார் கதை
- புதிய சைவ வினாவிடை (1)
- விதியை வெல்வது எப்படி
- கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்



பசுவதையை நிறுத்துவோம்
பசுவைக் காப்போம்.



ஒரு பசு 1000 பேருக்கு பால் கொடுக்கும்
ஒரு பசுவைக் கொன்றால் 25 பேர் சாப்பிடுவர்

இச்சஞ்சிகை ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டப சபை திரு.நா.முருகையா அவர்களால்
இல:351 மணிக்கூண்டு வீதி யாழ்ப்[illegible]தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org